வ.உ.சி.யும் திருக்குறளும்



செ. திவான்

வ.உ.சி.யும் திருக்குறளும்

வரலாற்றாசிரியர்

செ.திவான், எம்.ஏ,எம்ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்
106-F,4 A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை
தமிழ்நாடு. ✆ 0462 - 572665.

ஆசிரியரின் 48-வது நூல்

முதற்பதிப்பு : நவம்பர் 18, 2001.

வ.உ.சி. நினைவுநாள் வெளியீடு

விலை : ரூபாய் பத்து.

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

காணிக்கை

தமிழர் தலைவர் கண்ணியத்திற்குரிய திருமிகு. **வைகோ** எம்.பி. (மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர்) அவர்களின் தந்தையாரும் வாழ்நாள் முழுவதும் விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து விளக்கு வெளிச்சத்தில் திருக்குறளைத் தினமும் வாசித்து அதன்படி வாழ்ந்து காட்டிய பெரியவர் நினைவில் வாழும் கலிங்கப்பட்டி திருமிகு. **வையாபுரி நாயக்கர்** அவர்களுக்கு



சுஹைனா பதிப்பகம்

வீரத்தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

உலகெலாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச் சிறப்புப் பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்...

பிறப்பு

இன்றைய தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் வியாழக்கிழமையன்று, உலகநாதப் பிள்ளைக்கும் - பரமாயி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார் வ.உ.சி. இவருக்கு உடன்பிறந்தோர் எழுவர்; தந்தை உலகநாதப் பிள்ளையின் தமையன் சிதம்பரம் என்பவரின் நினைவாக சிதம்பரம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

கல்வி

வீரப் பெருமாள் அண்ணாவியிடம் தொடக்கக் கல்வியையும், கிருட்டினன் என்பவரிடம் ஆங்கிலமும், ஒட்டப்பிடாரத்தில் நடுத்தரக் கல்வியையும், திருநெல்வேலி ம.தி.தா.உயர்நிலைப் பள்ளியிலும், தூத்துக்குடியிலும் உயர்நிலைக் கல்வி பெற்று, திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வியும் பயின்று தேறினார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத்துரை ஐயர், சவரிராயப்பிள்ளை ஆகியோரிடமும் ஆங்கில-தமிழ் மொழியையும் சிறப்பாகக் கற்றறிந்தார்.

திருமணம்

ஒட்டப்பிடாரத்தில் வட்டார அலுவலகத்தில் எழுத்தராக பணியினைத் துவங்கிய வ.உ.சி. 1895-இல் தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கலானார். 1895-இல் திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் மகள் வள்ளியம்மையை மணந்தார்; கி.பி.1900 ஆம் ஆண்டில் அவர் மறைந்ததும், மீனாட்சி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

கப்பலோட்டிய தமிழன்

1905 முதல் 1908 வரை நான்கு ஆண்டுகள் வ.உ.சி.யின் அரசியல் வாழ்வில் துடிப்புள்ள ஆண்டுகளாகும். 1906 அக்டோபர் 16-இல் தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யைத் துவங்கினார். 1907-இல் சூரத் காங்கிரசிலும் 1908-இல் 'தேசாபிமான சங்கம்' நெல்லையில் அமையவும் வ.உ.சி. ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணிய சிவா

1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை வீர முரசு சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் விடுதலைத் தீயை வளர்த்தது. ஆத்திரங்கொண்ட ஆங்கிலேய அரசினரால் 1908 மார்ச் 12-இல் கைது செய்யப்பட்டார். 1908 ஜூலை 7-இல் வெள்ளையர் அரசு வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையை வழங்கியது.

செக்கிழுத்த செம்மல்

கோவைச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் வாடிய வ.உ.சி. 4 வருடம் 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் 24-12-1912-இல் விடுதலையானார்.

சென்னை-கோவை-கோயிற்பட்டி வாழ்க்கை

சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் அருணாச்சல நாயகன் வீதியிலும், திருமயிலையிலும், பிரம்பூரிலும் வாழ்ந்த வ.உ.சி. (1912-1919) குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் செய்தார்.

சென்னையில் தொடர்ந்து வாழ முடியாமல் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று கோவையில் வாழத் துவங்கினார் (1919-1922). அப்போது அரசியலிலிருந்து முழுமையாக விலகினார். காங்கிரசில் மிதவாதிகளின் செல்வாக்கினால் தீவிரவாதியான வ.உ.சி. காங்கிரசு இயக்கத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார்.

பின்னர், 1922-இல் கோயிற்பட்டியில் குடியேறி வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்த வ.உ.சி., 1927-இல் அரசியலில் திரும்பவும் தம்மை உட்படுத்திக் கொண்டு, சேலத்தில் நிகழ்ந்த மாநாட்டில் தலைமையேற்றுச் சிறப்பித்தார். தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டார்.

இறுதி

1932-இல் மாவட்ட ஆட்சித் துணைத் தலைவரின் தலைமையிடம் கோயிற்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் வ.உ.சி.யும் தூத்துக்குடியில் குடியேறினார்; அங்கு உடல் நலிவிற்கிடையில் வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்தார். 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீந்துப் புகழுடம்பு எய்தினார்.

எண்ண அலைகள்

அரசியல் உலகில் அஞ்சாநெஞ்சர் வ.உ.சி. ஆற்றிய அரும்பணிகளை அறிந்த அளவிற்கு அவரது இலக்கியத்தொண்டினை அகிலம் முழுமையாக இதுவரை அறியவே இல்லை எனலாம். தமிழறிஞர் சி.சு.மணி கூறுவது போல, ''கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்று இரண்டு தொடர்களைச் சொல்லி அவருடைய ஆளுமையை ஒரு சிமிழுக்குள் அடக்கி விடுவது தான் இன்று வழக்கத்திலிருந்து வருகிறது....'' வ.உ.சி தொல்காப்பியம், திருக்குறள் மணக்குடவர் உரை போன்ற பல நூல்களின் பதிப்பாசிரியராக விளங்கினார். தாமே பல பாடல்கள் புனைந்தார்; செய்யுள் நடையிலும் உரைநடையிலும் பலநூல்களை ஆக்கித் தந்தார். ஜேம்ஜ் ஆலன் எழுதிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்; தமது வாழ்க்கை வரலாற்றை அகவல் யாப்பில் எழுதி வெளியிட்டார். பல துறைகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்.

கி.பி. 1917-இல் திருக்குறள் மணக்குடவர் உரையை ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டு முதன்முதலில் அதனை வெளிவரச் செய்தவர் வ.உ.சி. இதற்கு மேலும் கி.பி. 1935-இல் திருக்குறளுக்கு விருத்தியுரையும் செய்து வெளியிட்டவர் வ.உ.சி. வ.உ.சிக்கும் திருக்குறளுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்த வரலாற்றுச் செய்திகளை ஒருசேரத் திரட்டிக் கூறிடும் முயற்சியே இச்சிறுநூல்.இந்நூலை வெளியிட எனக்கு உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கும் நண்பர்களுக்கும் நன்றியினைச் செலுத்துகிறேன்.

18-11-2001 செ.திவான்.

செ. திவான் எழுதிய, பதிப்பித்த வ.உ.சி. நூல்கள்

---

1. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
2. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
3. வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
4. வ.உ.சி.யின் பாடல்கள்
5. வ.உ.சி.யின் வி.ஓ.சி. கண்ட பாரதி
6. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
7. வ.உ.சி.யின் நூற்கோவை
8. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
9. வ.உ.சி.யும் பெரியாரும்
10. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்
11. வ.உ.சி.யும் தொல்காப்பியமும்
12. வ.உ.சி.யும் திருக்குறளும்

திருக்குறள் நீதி இலக்கியம்

அன்னைத் தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களைச் சங்க இலக்கியம், சமய இலக்கியம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம், புதுமைத் தமிழிலக்கியம் என்று பல வகையாகப் பாகுபாடு செய்யலாம். சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புடையவனவாகப் போற்றப்படுவன நீதி இலக்கியமும், சமய இலக்கியமுமாகும். சங்க காலத்திற்குப் பின்னர் நீதி நூல்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. இந்த நீதி நூல்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முடிமணியாகவும் திருக்குறள் விளங்குகிறது.★

தமிழ் மொழிக்கு'கதியாகத் திகழும் திருக்குறளில் 'தமிழ்' என்ற சொல் காணப்படாததைப் போலவே, நீதி நூலான திருக்குறளில் வடமொழிச் சொல்லான 'நீதி' என்ற சொல்லும் இடம் பெறவில்லை. ஆனால் அப்பொருளை உணர்த்துவதற்கு 'நயன்' என்ற சொல்லைத் திருவள்ளுவர் வழங்கியுள்ளதாகப் பரிமேலழகர் கருதுகிறார்.

திருக்குறளின் பெயர்கள்

திருக்குறள்:-	சிறந்த குறள் வெண்பாக்களினால் ஆன நூல்.
முப்பால்:-	அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை உடைய நூல்.
பொய்யாமொழி:-	பொய்யில்லாத சொற்களை உடைய நூல்; உண்மைப் பொருளை உணர்த்தும் நூல்; பயன் விளைவிலே தவறாத நூல்.
வாயுரை வாழ்த்து:-	வாயுறை - மருந்து; வாழ்த்து - வாழ்வித்தல் உடம்புக்கு உறுதி செய்யும் மருந்து போல், உயிர்க்கு உறுதி செய்து உலகத்தை வாழ்விக்கும் நூல்.
உத்தரவேதம்:-	வடமொழி வேதத்தின் பின் தோன்றிய வேதம்; வேதத்தின் பிற்பகுதியெனப்படுகிற உப நிஷத்துக்களின் கருத்து அமைந்தது.★★

'வேதம், விதிவிலக்குகளை விளக்குவது, வேதமே எனத் தகும் சிறப்பினது. தொன்மை நான்மறைகளைக் காட்டிலும் காலத்தாற்

★க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னை, 1977, பக் 1.

★ ★ வை.மு. கோபாலக்ருஷ்ண மாசாரியார் பதிப்பு, திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும், வை.மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் குறிப்புரை, 1937, பக். XIV.

பிற்பட்டது. ஆதலின் உத்தர வேதம் எனப்பட்டது. உபநிடதங்களைப் போல அறத் தத்துவங்களைத் தெரிவிப்பதால் இது உத்தரவேதம் என்றாயிற்று எனலே மிகப் பொருந்துவதாகும்★

தெய்வநூல்:- தெய்வதத்தன்மையுடைய நூல்.

திருவள்ளுவர் :- திருவள்ளுவராற் செய்யப்பட்ட நூல்

தமிழ்மறை:- தமிழ் வேதம் வடமொழி வேதத்தின் பொருளைத் தமிழில் உரைத்தது.

பொதுமறை:- எல்லாருக்கும் பொதுவான வேதம்.

திருவள்ளுவப்பயன்:- எல்லார்க்கும் எல்லாப்பயனையும் அளிப்பதுமான தொரு நூல்.

பொருளுரை:- பொருள் நிரம்பிய சொல்.

முதுமொழி:- பழமையான சொல்

இவை திருக்குறளின் பெயர்களாகும்.

திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

தேவர்:- தெய்வத்தன்மை உடையவர்.

தெய்வப்புலவர்:- ஓதாது எல்லாவற்றையும் முற்ற உணர்ந்தபெரியார் ஆதலின் இப்பெயர் பெற்றார்.

பொய்யில்புலவர்:- பொய்மை இல்லாத புலவர்

முதற்பாவலர்:- முதன்மையான பாவலர்

பெருநாவலர்:- நாவன்மை உடையார் நாவலர். ஏனைய நாவலர்களைப் போலாது விழுமிய பொருட்கள் பலவற்றையும் எளிய இனிய மொழிகளால் சுருங்கக் கூறினார் ஆதலின் பெருநாவலர்.

மாதாநுபங்கி: தாயை ஒத்த அன்பினர், செருக்கு அடங்கியவர்.

செந்நாப்போதார்:- கவிகளாகிய தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரினை உடையவர்.

நாயனார்:- பிரமனுடைய அவதாரமாகப் பேசப்படுதலின் இப்பெயர் பெற்றார்.

புலவர்:- பலதிறப்பட்ட அறிவை ஒருங்கே கொண்ட பேரறிவுடைமை புலமை அதனை உடையவர் புலவர்.

திருவள்ளுவருக்கு இலக்கிய உலகில் பத்துப்பெயர்கள் விளங்குகின்றன.

★மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், திருக்குறள் அழகும் அமைப்பும், சென்னை, 1971, பக். 23.

வள்ளுவர் வாழ்க்கைக் குறிப்புக்கள்

திருவள்ளுவர் பல கோணங்களிலிருந்து பார்க்கக்கூடிய அறிவியல் ஒளிமணி. அவரது வாழ்க்கை வரலாறு, பிறப்பு, தாய் தந்தையர் குறித்த விவரங்கள் பலவாறு கூறப்பட்டு வருகிறது அவற்றை ஆராய்ந்து அறுதியிடுதற்குரிய கருவிகள் போதியனவாகக் கிடைக்கவில்லை.

ரா. பி. சேதுப்பிள்ளை

சிந்தனையாளரும், சீர்திருத்தக்காரரும் சமதர்மச் சித்தாந்தியும், பகுத்தறிவுவாதியுமான திருவள்ளுவர் ஒரு புரட்சிக்காரர். சோழ தேசத்தில் பகவன் எனும் பிராமணருக்கும், கருவூரில் வாழ்ந்த ஆதி என்னும் புலைச்சிக்கும் திருமயிலை எனும் மயிலாப்பூரில் பிறந்தவர் வள்ளுவர் என்பர் எஸ். வையாபுரிப்பிள்ளை★ வள்ளுவர் என்பது குலப்பெயர் என்பர் ரா.பி.சேதுப்பிள்ளை★★.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை

ஞானமிர்தமென்னும் நூலுரையில் திருவள்ளுவருடைய தந்தை பெயர் யானி தத்தன் என்றும் தாய் ஆதிப் புலைச்சி யென்றும் கூறுகிறது. இக்கதைகள் புனைந்துரைக் கதைகளாகும்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய வித்துவான் ஔவை.சு. துரைசாமிப் பிள்ளை எழுதிய 'வள்ளுவர் வரலாறு' எனும் கட்டுரையில் மேற்கூறியவற்றைச் சான்றுகளுடன் மறுத்துள்ளார்.

ந.சி. கந்தையாபிள்ளை

பண்டைய இலக்கியங்கள் வள்ளுவர் என்போர் அரசனது கட்டளையை யானை மீதேறிச் சென்று மக்களுக்கு அறிவிக்கும் கருமத்தலைவர்களில் ஒருவர் எனக்கூறும். வள்ளுவரின் இயற்பெயர் மறக்கப்பட்டது. பிற்கால மக்களால் அவர் அவரது உத்தியோகப் பெயரால் மாத்திரம் அறியப்படலாயினர் என்பர்.ந.சி. கந்தையாபிள்ளை.★★★

திருவள்ளுவமாலையில் வள்ளுவரது ஊர் மதுரையெனக் குறிக்கப்பட்டுள்ளது; பெரும்பான்மையான வழக்காலும், சைன சமயத்தில்

★ தமிழ்ச்சுடர் மணிகள், சென்னை, 1959, பக் 60-61 & திருவள்ளுவர், திருவைகுண்டம், 1947, பக் 7-11.

★★ திருவள்ளுவர் நூல் நயம், சென்னை, 1932 பக் 2.

★★★ தமிழ்ப்புலவர் அகராதி, சென்னை, 1960, பக் 229.

இடையில் வழங்கும் கதையும், திருவள்ளுவரது ஊர் திருமயிலை என்றும் குறிக்கிறது.★ இந்த ஆய்வினை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

திருக்குறளின் தனிச்சிறப்பு

திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டே இருக்கும். அதனால்தான் திருக்குறளைப் பல மொழிகளில் பலஅறிஞர்கள் மொழிபெயர்த்துள்ளனர்.

திருக்குறள் மொழி பெயர்ப்புகள்

இலத்தின் வீரமாமுனிவர் - *1730* சார்லசுகிரால் - *1866*
இத்தாலி அந்தோணியா சொரன்றினோ - *1985*
ஆர்மீனியன் - *1978*, செக்கு கமில் சுவலபில் - *1952-54*
டச்சு காறு - *1964*, பின்னி பென்றி ஆல்டோ *1972*,
பிரெஞ்சு ஏரியல் *1848*, தூமாசு *1754*, இலேமார்சே *1867*,
உலூரயி சாகோலியற்று *1867*, தே பாரிக்கு, தே போன்றேனியு*1869*,
செருமன் காமேரா *1803*, இரீக்கார்டு பிரடெரிக்கு *1847*,
கார்ல் கிரால் *1854*, வில்லியம், நார்கேற்று *1866*,
ஆல்பிரட்டு பென்சு இலலிதாம்பாள் *1977*,
போலீசு உமாதேவி வாண்டி தைநோவ்சுகி *1958*,
உருசியன் கிளாசோவ் கிருட்டிணமூர்த்தி *1963*,
ஆலிபு இபுராகிமோ *1974*, சுவீடிசு இங்கியா பிரைகோல்ம் *1971*,
ஆங்கிலம் கிண்டர்சுலி *1794*, எல்லிசு *1812*, துரூ *1840*, சார்லசு கோவர்*1872*
எட்வர்டு சேவிற்று இராபின்சன் *1878*, இலாசரசு *1885*,
சா.யு.போப்பு *1886*, போப்லி *1951*, ஓயிற்று எம்மோன்சு *1976*,
வ.வே.சுப்பிரமணியம் *1975*, திருமதி.திருநாவுக்கரசு *1916*,
வடிவேல் *1919*, சபாரத்தினம் *1920*, பெருங்குளம் அ.மாதவையா*1926*,
ஆங்கிலம் மிக்கேல் *1928*, பரமேசுவரன், அரங்கநாதன் *1933*,
இராசாசி *1937*, மு.சு.பூரணலிங்கம் *1942*, இராமச்சந்திர தீட்சிதர் *1949*,
இராசகோபாலன் *1950*, சக்கரவர்த்தி *1953*, தங்கசாமி *1954*,
ஐசக்கு தங்கையா *1955*, கு.மா.பாலசுப்பிரமணியன் *1962*,
முத்துசாமி *1965*, வி.சின்னராசன் *1967*, சுத்தானந்த பாரதியார் *1968*,

---

★ வித்துவான் சி. மீனாட்சி சுந்த சிவை, தொ.ஆ, வள்ளுவர் வாய்மொழி, கட்டுரைத் தொகுப்பு, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, வள்ளுவர் வரலாறு, பக் 1-5.

வான்மீக நாதன் 1969, கசுதூரி சீனிவாசன் 1969, ஈ.வி.சிங்கன் 1975, எசு.எம்.டயசு 1982, வி.கே.பரமேசுவரன், இரா.கள்ளப்பிரான் 1995, அரபி முகம்மது யூசுபு கோகன் 1976, பருமியம் மியோதாண்டு1964, சீனம் சீயெங்குசி 1967, யப்பானியம் மாத்சு நாகா 1981, மலாய் இராமிலிபன் தகீர் 1964, இசுமாயில், உசேன் 1967, சிங்களம் மிசிகாமி 1961, சார்லசு தேசில்வா 1964, பிசியன் பெருவிக்கு 1964, வங்காளி நளினி மோகன் சன்யால் 1939, ஈ.சி. சாசுதிரி 1974, குசராத்தி நசுங்குலால் சோக்கி 1931, காந்திலால் கலாணி 1971, இந்தி கேனானந்து இராகத்து 1924, கோவிந்தராசு செயின் 1942, பி.டி.செயின் 1961, சங்கரராசு 1958, வேங்கட கிருட்டிணன் 1964, சேசாத்திரி 1982, கன்னடம் சிறீ காந்தையா 1940, குண்டப்பா 1960, சீனிவாசன் 1982, மலையாளம் இராமசாமி 1595, பெருநாழி கிருட்டிண வைத்தியன் 1894,அகழத்து குரூப்பு திவான் பகதூர் கோவிந்தபிள்ளை 1875-1915, தாமோதரன் 1951, இராமகிருட்டிணன் 1957, கோபால குரூப்பு 1875, பாலகிருட்டிண நாயர் 1963, கோவிந்தன், இராமேசு நாயர் 1998, ஒரிசா கிசுரோத்து தாசு 1985, பஞ்சாபி இராம் மூர்த்தி சருமா 1983, இராசசுதானிகமலா கூர்க்கு 1982, சமஸ்கிருதம் அப்ப வாச பேயின் 1922,சங்கர சுப்பிரமணிய சாசுதிரி 1940, சீர்இராம தேசிகன் 1956, சவுராட்டிரம் கவிஞர் எஸ்.எஸ்.இராம்1980, தெலுங்கு கனுப்பர்த்தி வேங்கடராம் ஸ்ரீ வைத்தியநாத நாதர் 1887 நரசிம்மாலு 1882, இலட்சுமி நாராயண சாசுதிரி 1906, சீர்இராமுலு 1948, செகந்தா சாசுதிரி 1952, இராதாகிருட்டிண சருமா 1954, சலய்யா 1955, சிறிபதி சாசுதிரி 1966, உருது சூரவர்த்தி, அசரத்து 1966,உருதுமுகம்மது யூசுபு கோகன் 1976, வடமொழி கலியன் இராமானுச சீயர் 1978★

ஸ்ரீசக்கரபாணி ஐயர்

திருக்குறளை வடமொழியில் அறத்துப்பாலை மாத்திரம் மொழி பெயர்த்து ‘நீதி குஸுமமாலா’ (திருக்குறள் அறத்துப்பால்) ஸ்ரீ அப்பா தீட்சிதர் கே.வி. சுப்பிரமணிய சாஸ்திரியார் பதிப்பித்துள்ளார்.திருக்குறள் முழுவதையும் தியாக சமுத்திரம் ஸ்ரீசக்கரபாணி ஐயர் பல வருஷங்களுக்கு முன்பு வடமொழிச் சுலோகங்களாக மொழிபெயர்த்து

★ தகவல் முனைவர். பா.வளன் அரசு, (தந்த குறிப்புக்கள் சிறு திருத்தங்களுடன்)

அமைத்திருக்கின்றார்.★ திருக்குறளுக்கு இப்படி எத்தனையோ மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்திருக்கின்றன; அந்த வரலாறு முழுவதுமாகத் திருக்குறள் ஆய்வார்களால் தொகுக்கப்படவேண்டும்.

திருக்குறள் உரைகள்

தாய்மொழியில் தோன்றிய நூல்களுள் திருக்குறளுக்குப் பலவகையான சிறப்புக்கள் உண்டு. பலப்பல உரைகள் காலந்தோறும் தோன்றி வருவது அந்நூலின் சிறப்புக்களில் ஒன்று. இளங்கோஅடிகள், சீத்தலைச்சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற புலவர் பெருமக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய நூல்களில் ஆங்காங்கே திருக்குறளை எடுத்தாண்டு விளக்கமும் தந்துள்ளனர்.

துவக்ககால திருக்குறள் உரையாசிரியர்கள்

திருக்குறளுக்குப் பத்தாவது உரையாகப் பரிமேலழகர் உரை தோன்றியது.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேலழகர் பருதி-திருமலையர்
மல்லர் பரிப்பெருமான் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை கண்டார் இவர்" என்று திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மர் என்று தனிப்பாடல் விளக்குகிறது.

இதில் பரிமேலழகர், மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஐவர் இயற்றிய உரைகள் கிடைத்து அச்சில் வெளிவந்துள்ளன. ஏனையோர் உரைகள் கிடைக்கவில்லை. கடவுள் வாழ்த்தில் 5,6வது குறள்களுக்குத் தாமத்தர், நச்சர், தருமர் ஆகிய மூவர் உரைகள் கிடைத்துள்ளன. திருமலையர், மல்லர் ஆகியோரது உரைகள் மறைந்தது தமிழிலக்கிய உலகிற்குப் பெரிய இழப்பாகும்.★★

பரிமேலழகர்

பரிமேலழகியார், பரிமேலழகியன், பரிமேலழகரையன் என்றெல்லாம் அழைக்கப்படுபவர் பரிமேலழகர். இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்றும், காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்றும் குறிப்பிடுகின்றனர். திருக்குறளுக்கு இன்று வரை போற்றப்படுகின்ற உரை இயற்றிப் பெருமையுடன் விளங்குபவர் வடமொழி தென்மொழிப்புலவர் பரிமேலழகர். அவரது

★ உ.வே.சாமிநாதையர், *திருவள்ளுவரும் திருக்குறளும்,* சென்னை *1936,* பக்4,5.
★★ மு.வை. அரவிந்தன், *உரையாசிரியர்கள், 1968,* சிதம்பரம், பக் *272.*

உரையில் அவரது காலத்திற்கேற்ற பொருள்களும் இருந்தது.★ எனவே காலப்போக்கில் பரிமேலழகரின் திருக்குறள் உரைக்கு மாறாக உரை காணும் முயற்சி தோன்றியது.

வ.சுப. மாணிக்கம்

திருக்குறளுக்குப் பலப்பல உரைகள் தோன்றியதற்கான காரணங்கள் குறித்து, ''பாடவேற்றுமையால் சில உரை வேற்றுமைகள் காணப்படும். இவை ஆராய்ந்து ஏற்கத்தக்கன. முன்னோன் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக்கூடாது; தாம் ஒரு தனி உரை எழுதத் துணிந்ததற்குச் சான்றாக எங்கனமேனும் பல குறட்குப் புத்துரை சொல்லவேண்டும் என்னும் முனைப்பே திருக்குறள் உரை பலவற்றின் தோற்றத்திற்குக் காரணம் என்று சுருங்கச் சொல்லலாம்'' என்றும்,''காலவேறுபாடும், கல்வெட்டு மாறுபாடும், பாடபேதங்களும், ஊடாடிய வேதங்களும், சாதி சமயப் பாகுபாடுகளும், அரசு மாற்றமும் வடமொழிச் செல்வாக்கும் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள்,தோன்றிட ஏதுக்களாக அமைந்தன'' என்றும் குறிப்பிடுவர்.★★

அம்பலவாணக் கவிராயர்

திருநெல்வேலி அம்பல வாணக்கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டினத்திற்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்து திருவாவடுதுறை ஆதின வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடி கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதிப்பித்த காயிதப் பொத்தகம்.' இது பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு அங்கீரச வருஷம் தொண்டை மண்டலம் சென்னைப்பட்டினத்தில் தஞ்சைநகரமலையப்பப் பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சில் பதிப்பிக்கப்பட்டது. மாசத் தினச் சரிதையின் அச்சுக்கூடம் இ.ஆண்டு தஅளயஉ.★★★

மாசத்தினச்சரிதை

கி.பி. 1812ஆம் ஆண்டிலேயே 'மாசத்தினச் சரிதை' என்ற மாத இதழ் தமிழில் வெளிவந்திருக்கிறது. இந்த இதழ் வெளிவந்த அச்சுக்கூடத்தில் திருக்குறள் முதன்முதலில் முழுவதுமாக அச்சேறியது.★★★★

★ திரு.வி.க திருக்குறள் விரிவுரை, பாயிரம், 1956, சென்னை, பக்.8

★★ வ.சுப. மாணிக்கம், எந்தச் சிலம்பு, 1964, பக் 40,41

★★★ அ.மா. சாமி, 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், 1992, பக் 28.

★★★★ கி.பி. 1794-இல் திருவள்ளுவர் கடல் திரட்டு' அல்லது அறிவுக் கடல் என்னும் நூல் இலண்டனில் கிண்டர்ஸ்லி (Kindersley) என்பார் திரட்டி வெளிவந்துள்ளது.

வ.உ.சியும் திருக்குறளும்

சுவாமி வள்ளி நாயகம்

கி.பி. 1906-இல் 'சுதேசிய நாவாய்ச் சங்கம்' கண்டவர் வ.உ.சி; அதற்கும் முன்பே திருக்குறளில் அவருக்கு ஆழ்ந்த ஈடுபாடு, உண்டு என்பதனை வ.உ.சி. தனது சுயசரிதையில்'

'மாநிலம் கொண்டிட வள்ளியும் உவந்திட

திருவள்ளுவரின் தெய்வமாமறையின்

பெருவளக் குறள் சில பேணிப் படித்தேன்' என்று கூறியுள்ள வரிகளால் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே திருக்குறள் மீது வ.உ.சி. கொண்டிருந்த ஈடுபாட்டினை தெளிவாக நாம் அறிய முடிகிறது.

சிறையிலும் குறள் குறித்த சிந்தனை

ஆங்கிலேய ஆட்சியாளர்கள், தேசபக்தச் செம்மல் வ.உ.சி. மீது ராஜ துரோக வழக்குத் தொடுத்து சிறையில் அடைத்தனர். தேசியக்கவி சி.சுப்பிரமணிய பாரதியார் (1882- 1921) புதுவையிலிருந்த போது 'கர்மயோகி' எனும் மாத இதழை மகான் அரவிந்தரின் ஆங்கில இதழைத் தழுவி நடத்தி வந்தார். அதில் ஸௌம்ய வருஷம் பங்குனி மாதம் மார்ச் 1910-இல் வந்துள்ள விஷயம் இதோ...

''சில தினங்கள் முன்பு கோயம்புத்தூர் ஸெண்ட்ரல் ஜெயிலில் இருக்கும் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையை அவருடைய மனைவி மக்களும், அவருடைய ஆப்தராகிய ஸ்ரீ வள்ளிநாயக சாமியாரும் வேறொரு நண்பரும் பார்வையிடச் சென்றார்கள். அந்த சந்திப்பில் நடந்த சம்பாஷணையினிடையே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களின் வாக்கிலிருந்துதித்த சில வசனங்கள்...

தமிழர்களெல்லோரும் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றத் துறந்த முனிவரேயாயினும், என்னைப் பெற்ற தந்தையேயாயினும் யான் பெற்ற மக்களேயாயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதுமில்லை; நேசிப்பதுமில்லை''★

1910ஆம் ஆண்டு கோவைச் சிறையில் தம்மைச் சந்திக்க வந்த இருவரிடம் கூறிய இக்கூற்று வ.உ.சி. திருக்குறள் மீது கொண்டிருந்த மதிப்பை உணர்த்துகிறது.★★

★ மேற்கோள், ஆ.இரா.வேங்கடாசலபதி, வ.உ.சியும், பாரதியும், சென்னை, 1994 பக் 113.

★★ ஆ.சிவசுப்பிரமணியன், வ.உ.சி. ஓர் அறிமுகம், சென்னை 2001, பக். 56

24.12.1912-இல் கொடுஞ்சிறைவாசத்தை முடித்து விடுதலையானார் வ.உ.சி. தனது வாழ்விலேற்பட்ட பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியிலும் தனது சிந்தையிலிருந்து வ.உ.சி. திருக்குறளை மறந்துவிடவில்லை. தொடர்ந்து திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்; அதன் விளைவு திருக்குறள் மணக்குடவர் உரையினை வ.உ.சி.தாமே முதன்முதலில் அச்சில் பதிப்பித்து மகிழ்ந்தார். இதோ அந்த சரித்திரச் செய்திகள்....

மணக்குடவர்

மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை திருக்குறளுக்குப் பழங்காலத்தில் உரை தந்தவர்கள் பத்துப் பேர் ஆவார்கள்.திருக்குறளுக்கு சிறப்பானதொரு உரை செய்திட்ட மணக்குடவரைப் பற்றி அறிந்த கொள்ள இவரது உரைக்கு முன்னால் உரைச் சிறப்புப்பாயிரம் எதுவும் இல்லை.

மணக்குடி என்ற ஊரில் பிறந்து அவ்விடத்தில் வாழ்ந்ததால் மணக்குடியார் என்று பெயர் ஏற்பட்டு அப்பெயரே மணக்குடவர் என்று மருவிற்று. மணக்குடி என்ற பெயருடன் தமிழகத்தில் பல ஊர்கள் இருப்பதால் அவர் எப்பகுதியில் வாழ்ந்தார் என்றும் அறியமுடியவில்லை.

இளம்பூரணர்

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலில் உரை கண்டவர் இளம்பூரணர்; அவர் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரமாய் உள்ள செல்லூரில் இளம்போதி என்ற அந்தணருக்குப் பிறந்தவர். இளம்பூரணரைப் பற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுளில் (செந்தமிழ் 20, பக்கம் 503) *'தன்னறி அளவையில் நல்லுரை தேவர் பன்மணிக் குறட்பால் மதிப்பிடல் பொறித்தோன்'* என்ற அடிகள் திருக்குறளுக்கு இளம்பூரணர் உரை இயற்றினார் என்பதை மிகத் தெளிவாய் உரைக்கின்றன. இன்று வெளியாகியுள்ள பழைய உரைகளில் இளம்பூரணர் உரை இல்லை. திருக்குறளுக்கு இளம்பூரணர் உரை இயற்றினார் என்ற செய்தியும் வழங்கப்படவில்லை.

டி.வி. சதாசிவப்பண்டாரத்தார்

ஆராய்ச்சி அறிஞர் டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் தனது 'இலக்கிய ஆராய்ச்சிகளும் கல்வெட்டுக்களும்' என்ற நூலில் *(1961)* *'குணகடல் செல்லூர் மணக்குடிபுரியான்'* எனும் உரைப்பாயிர வரியைக் கொண்டும், இளம்பூரணரின் தொல்காப்பிய உரையிலும், மணக்குடவரின் திருக்குறள் உரையிலும் காணப்பட்ட கருத்து ஒப்புமையாலும், இளம்பூரணரே

மணக்குடவர் என்று முடிவுக்கு வருகிறார். வ.உ.சி, திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையையும் மட்டும் பதிப்பித்தார் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம். எதுவாயினும் இத்துடன் அதனை நிறுத்துவோம்.

மணக்குடவரின் திருக்குறள் உரை

''திருக்குறள் உரைகளில் பரிமேலழகர் உரைக்கு அடுத்தபடியாக அச்சேறி மக்களிடத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்ற பெருமை மணக்குடவர் உரைக்கு உண்டு. பரிமேலழகர் உரையை மறுப்பவர்களும் அவரது கருத்தை ஏற்காதவர்களும் மணக்குடவர் உரையை நோக்குவது பல ஆண்டுகளாக இருந்து வரும் வழக்கமாகும்.

மணக்குடவருடைய உரை தெள்ளிய தமிழில் எளிய நடையில் அமைந்துள்ளது. பொழிப்புரையும் சில இடங்களில் விளக்கமும் உள்ளன. தமிழ்ப்பண்பாடு தழுவி எழுதப்பட்ட தெளிந்தவுரை என்று இவரது உரையைப் போற்றுவர். இவர் பிற உரையாசிரியர்களைப் போல வடநூற் கருத்தைத் தம் உரையில் புகுத்துவதில்லை. புதிய பாடங்களைக் கொண்டு, சொற்களைப் பிரிக்கும் முறையில் புதுமை கையாண்டு சிறப்பாக உரை எழுதிச் செல்வது இவரது பண்பாகும்' என்பர் மு.வை. அரவிந்தன்.

திருக்குறள் பதிப்புக்கள்

கன்னித் தமிழகத்தில், கற்றோர் போற்றிடும் திருக்குறள் பதிப்புக்கள் காலந்தோறும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன.

உரைப்பதிப்பு, உரைவிளக்கப்பதிப்பு, உரைவேறுபாட்டுப்பதிப்பு, உரைக்கொத்துப்பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு, தெளிவுரைப்பதிப்பு, மலிவுப்பதிப்பு, கையடக்கப்பதிப்பு, உரையுடன் கூடிய கையடக்கப்பதிப்பு, பரிசுப்பதிப்பு என திருக்குறள் பதிப்புக்கள் பல வெளிவந்துள்ளன. இவற்றுள் பரிமேலழகர் உரைப்பதிப்பே மிகுதியாகும். இந்த நிலையில் திருக்குறள் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்திட தமிழகம் தந்த மாமனிதர் வ.உ.சி. முயன்றார்.

காலச்சூழல்

வ.உ.சி. பதிப்புப் பணியினை மேற்கொண்ட காலக்கட்டத்தில் பழைய நூல்களைப் பதிப்பிக்க முன் வந்தோர்க்குப் பொருட்பற்றாக்குறை இருந்தது. அதனை மீறித் தமிழ் நூல் ஒன்று பதிப்பிக்கப்பட்டு வெளிவரினும் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக அமைந்திருந்ததால் நூலினை வாங்கிப்

பயில்வோர் மிகச் சிலராக இருந்தனர். பயின்ற மிகச் சிலரும் பதிப்பாசிரியர்களைக் குறை கூறி அவர்களின் ஊக்கத்தினையும், உரனையும் அழிக்கலாயினர். பழங்கால ஏடுகளைக் கண்டுபிடிப்பது மிக அரிய செயலாய் இருந்தது. கிடைத்த ஏடுகளும் செம்மையற்று இருந்தன; அவ்வேடுகளில் காணப்பட்ட எழுத்துக்களின் முறைமை குழப்பத்தைத் தந்தது. இத்தகைய இடர்பாடுகள் நிறைந்த சூழ்நிலையில் வ.உ.சி. பதிப்புப் பணியினை திருக்குறள் மீதுள்ள அளவற்ற ஆர்வம் காரணமாக ஆற்ற முன்வந்தார்.★

வ.உ.சி.யின் திருக்குறள் பதிப்பு

இலக்கியத்துறையில் வ.உ.சி. பதிப்பித்த நூல் திருக்குறளும் தொல்காப்பியமும் ஆகும். (தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய எழுத்ததிகார உரையினையும், பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை இயல்களையும், பின் ஏழு இயல்களையும் தொடர்ந்து பதிப்பித்தவர் வ.உ.சி. இது குறித்த விவரங்களை செ.திவான் எழுதிய 'வ.உ.சியும் தொல்காப்பியமும்' எனும் நூலில் விரிவாகக் காணலாம்.)

சென்னை பெரம்பூரில் வ.உ.சி. வாழ்ந்து வந்தபோது கி.பி. 1917-இல் 'திருக்குறள் அறத்துப்பால்-மணக்குடவர் பதிப்பு' எனும் தலைப்பில் வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்து 140 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளியிட்டு மகிழ்ந்தார்.

பதிப்பு உருவான வரலாறு

''திருக்குறளுக்கு உரை செய்திட்ட பரிமேலழகர் தவிர எஞ்சிய ஒன்பதின்மர் உரைகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார் வ.உ.சி. அவருக்கு மணக்குடவர் உரைப்பிரதி கிடைத்தது. தமக்குக் கிடைத்த பிரதியைச் சென்னை அரசிற்குட்பட்ட கையெழுத்துப் புத்தகசாலையில் உள்ள மணக்குடவர் உரைப்பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்தார் வ.உ.சி.

அரசாங்கப் புத்தகசாலையில் உள்ள திருக்குறள் மணக்குடவர் உரைப்பிரதியில் அதிகாரப்பெயரும், முறையும் பரிமேலழகர் முறையைப் பின்பற்றியிருந்தனவென்றும், அதில் சில குறள்களின் மூலமும் உரையும் சிதைந்த நிலையிலும், குறைந்த நிலையிலும் இருந்தன'' என்றும் வ.உ.சி. தமது பதிப்புரையில் கூறியுள்ளார்.★★

★ அ. சங்கரவள்ளிநாயகம், வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப்பணிகளும், 1994, பக் 230.

★★ வ.உ.சி., திருக்குறள்-மணக்குடவர், பதிப்புரை, சென்னை, 1917, பக் iii,iv.

உ.வே.சாமிநாதையர்

திருக்குறள் பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட வ.உ.சி. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரவர்களிடத்திலிருந்த மணக்குடவர் உரைப்பிரதியைத் தருவித்துப் பார்த்தார்; அந்தப்பிரதி முற்கூறிய அரசாங்கத்தின் புத்தகப் பிரதியிலிருந்து பிரதியெடுக்கப்பட்டது என்பதனையும் அறிந்தார்.

சகஜாநந்தசாமி

அரிசன (தலித்) வகுப்பைச் சார்ந்த சகஜானந்தாசாமி எனும் துறவியைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உடன் இருக்கச் செய்தவர் வ.உ.சி.★ சகஜாநந்தசாமி வ.உ.சி. தமக்குக் கிடைத்த மணக்குடவர் உரைப் பிரதியையும், உ.வே.சா அவர்களிடம் பெற்ற பிரதியையையும் வைத்துக் கொண்டு வேதாந்தப்பயிற்சி கொண்ட சகசாநந்தசாமி அவர்களைத் துணையாகக் கொண்டு, இருப்பவற்றை ஒழுங்குபடுத்தியும், பிழை பட்டனவற்றையும் நீக்கியும், மணக்குடவர் உரையை முழுமையாகப் பதிப்பித்துள்ளார்.

தி. செல்வக்கேசவராய முதலியார்

சென்னைக்கு அருகிலுள்ள திருமணம் என்னும் ஊரில் வாழ்ந்த கேசவ சுப்பிரமணிய முதலியாரின் மகன் செல்வக் கேசவராய முதலியார் ஆவார். *(1864-1921)* இவர் 1904-இல் 'திருவள்ளுவர்' என்னும் நூலை வெளியிட்டவர். பல நூல்களை அச்சிட்டவர்.

த. கனக சுந்தரம் பிள்ளை

இலங்கை திரிகோணமலையில் தம்பி முத்துவின் மகனாகப் பிறந்தவர் கனகசுந்தரம்பிள்ளை *(1863-1922)*. 'தமிழ் நாவலர் சரிதை' என்னும் நூலைப் பதிப்பித்தவர்; சிறந்த தமிழறிஞர். வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர் உரையைப் பதிப்பித்து வரும்போது, தி. செல்வக் கேசவராய முதலியார், த.கனகசுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் அதனைக் காண்பித்தார். தமிழறிஞர் இருவரும் அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்துள்ளதாக வ.உ.சி. தெரிவித்துள்ளார்.★★

அச்சிடக் காரணம்

''மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையிற் சிறிதும்

★ என். சம்பத், பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம்பிள்ளை, *1995*, பக் *54*.

★★ வ.உ.சி. திருக்குறள் மணக்குடவர், பதிப்புரை, பக் IV

பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும் பலபல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துள்ளனர். இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும், அதன் மூலபாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இருவரும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்'★ என்று வ.உ.சி. மணக்குடவர் உரையினைப் பதிப்பித்த சூழலை விளக்குகின்றார்.

பதிப்பின் சிறப்புக் கூறுகள்

வ.உ.சியின் திருக்குறள் பதிப்பின் சிறப்புக்கூறுகளை, அருஞ்சொல் விளக்கம் தருதல், சொல்வருவித்து விளக்கம் தருதல், விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல், விளக்கம் இல்லா இடங்கட்கு விளக்கம் தருதல், உரை ஒப்பீடு, இலக்கணக் குறிப்பு சுட்டுதல், அதிகார வைப்புமுறை என ஏழு வகையாகப் பிரித்து விரிவான விளக்கம் தந்துள்ளார் அறிஞர் அ.சங்கர வள்ளி நாயகம்.★★

பிறர்காட்டாத பல புதுமைக்கூறுகள்

திருக்குறள் மணக்குடவர் உரைப்பதிப்பில் வ.உ.சி. குறள்களையும், உரையினையும் எளிதில் பொருள் கொள்ளும் நிலையில் சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளார். பதவுரை தந்துள்ளார்; துறவற இயலினைப் பொருத்தமான முறையில் விளக்கியுள்ளார். உரையாசிரியர் உரை காட்டாத குறள்களுக்கு தமது உரையினை வழங்கியுள்ளார். உரையாசிரியர் விடுத்துள்ள அதிகாரங்களுக்கு வைப்பு முறையினையும் வ.உ.சி. சுட்டிக் காட்டியுள்ளார். வ.உ.சிக்குப் பின்னர் 1925-இல் பொன்னுச்சாமி நாட்டார் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்தார். அதுபோல் 1955-இல் இராஜ. சிவ.சாம்பசிவ சர்மா பதிப்பித்த மணக்குடவர் உரையில், சொந்தக்கருத்து அரிய சொற்களுக்குப் பொருள் விளக்கம், இலக்கணக்குறிப்பு போன்ற எதுவும் இல்லை. ஆனால் வ.உ.சி. பதிப்பித்த மணக்குடவர் உரை பிறர் காட்டாத பல புதுமைக்கூறுகளுடன் அமைந்துள்ளது' என்பர் சங்கர வள்ளிநாயகம்.

திருக்குறள் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்ததோடு வ.உ.சி. திருக்குறள் மீது திருப்தி கொண்டாரில்லை; திருக்குறளின் பல்வேறு உரைகளையும் படித்தறிந்தார்.

★ வ.உ.சிதம்பரம் பிள்ளை (ப.ஆ) திருக்குறள், மணக்குடவர், பக்,3.

★★ வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப்பணிகளும், பக், 232-237.

திருக்குறள் உரைகள்

தன்னேரில்லாத தனிப்பெருநூல் திருக்குறள்; 'திரு' என்பது தமிழிலக்கிய உலகில் பத்தொன்பது வகையான பொருள்களையுணர்த்தும் ஒரு சொல்லாகத் திகழ்கிறது. அந்தத் 'திரு' என்ற சொல்லை அடைமொழியாகக் கொண்ட திருக்குறளுக்கு காலந்தோறும் புதுப்புது உரைகள் வெளிவந்ததையறிந்தார்.

தாமும் திருக்குறளுக்கு உரை எழுதிட முயன்றார். வ.உ.சியின் திருக்குறள் உரை விஷயத்திற்கு வருவதற்கு முன்பு, திருக்குறளுக்கு வ.உ.சிக்கு முன்பும், பின்பும் இது காறும் வெளிவந்துள்ள உரைகள் குறித்த சிறு சரித்திரக் குறிப்புக்கள் இதோ....

பழைய உரை

திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள், மூலமும் ஓர் பழைய உரையும் எனும் நூல் உ.வே.சா. நூல் நிலைய வெளியீடாக *(1961,) 414* பக்கங்களைக் கொண்டு வெளியானது. அதில் உரையாசிரியர் பெயர் குறிப்பிப்படவில்லை.

மு.ரா. அருணாசலக்கவிராயர்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மு.ரா.அருணாசலக் கவிராயரால் எழுதப்பெற்று, மதுரை *'விவேகபாநு'* அச்சியந்திர சாலையில் 1913-இல் பதிப்பிடப்பெற்று ஒரு ரூபாய் நான்கு அணா விலையில் 266 பக்கங்களில் வெளிவந்தஉரை *'தமிழ் வேதமாகிய திருக்குறள் வசனம்'* ஆகும்.

அரசஞ் சண்முகனார்

சோழவந்தானூர் மகாவித்வான் ஸ்ரீமத் அரசஞ் சண்முகனார் இயற்றிய *'வள்ளுவர் நேரிசை'* முதல் நூறு செய்யுள் மூலமும், பண்டிதர் ம. கோபால கிருஷ்ணய்யரது குறிப்புரை கதை விளக்கத்துடன் 1919-இல் 10 அணா விலையில் 72 பக்கங்களில் வெளிவந்த நூல் வள்ளுவர் நேரிசை ஆகும். ம.சுந்தரபாண்டிய ஓதுவாருடன் இணைந்து 1921-இல் வெளியிட்ட நூல் *'திருக்குறள் முதற்குறள் விருத்தி'* ஆகும்.

கி. வீரராகவன்

வாலாஜாபாத் இந்துமதப்பாடசாலை தலைமைஆசிரியரும் தமிழ்த்தொண்டில் தலைமை ஆசிரியரும், தமிழ்த்தொண்டில் ஊக்கமும்

உண்மை ஆர்வமும் உடையவராகிய காஞ்சிபுரம் கி.வீரராகவன் எழுதிய திருக்குறள் உரை 1929-இல் 270 பக்கங்களில் வெளியானது.

S.N. அடைக்கலம் பிள்ளை

'நற்குடி வேளாளர் வரலாறு' உரையாசிரியர் சிவகளை S.N.அடைக்கலம் பிள்ளையால் சுருக்கமாகவும் எளிய நடையிலும் எழுதப்பட்ட பொழிப்புரையுடன் 'திருக்குறள் பாடம்' எனும் தலைப்பில் ஸ்ரீவைகுண்டம் சிவகாமி பிரிண்டிங் பிரஸில் இருந்து 1931-இல் 3 அணா விலையில் அச்சிடப்பட்டது திருக்குறள் உரை என்னும் நூலாகும்.

சொ. தண்டபாணிப்பிள்ளை

பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகளின் மாணவர் நாகை.சொ.தண்டபாணிப்பிள்ளை அவர்கள் எழுதிய 'திருக்குறள் அறத்துப்பால் விருத்தியுரை, 1933-இல் 373 பக்கங்களில் வெளியானது.

கோ. வடிவேலு செட்டியார்

இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த போதகாசிரியர் கோ. வடிவேலு செட்டியார் (1863-1936) திருக்குறளுக்குத் தெளி பொருள் விளக்கமும் கருத்துரையும் 1904-இல் எழுதியுள்ளார்.

வை.மு.சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள்

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்த வை.மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள், *'திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும்'* என்று குறிப்புரையுடன் ஆர்.ஜி. அச்சுக்கூடத்தில் பதிப்பித்து 1937-இல் 293 பக்கங்களில் நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

கா.மு. சின்னப்பா பிள்ளை

1950-இல் வித்வான் கா.மு. சின்னப்பாபிள்ளை திருக்குறள் மூலத்தை புதிய அதிகார வைப்பு முறையுடன் வெளியிட்டார்.

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை

கணியர், டாக்டர், சென்னை மாகாணத் தமிழ்சங்க அமைச்சர் இ.மு.சுப்பிரமணிய பிள்ளை உலகப் பொதுமறை (திருக்குறள்) ஒழுக்கமுறை எனும் 137 பக்கங்களைக் கொண்ட நூலை 1951-இல் வெளியிட்டார். இதில் பல குறள்களுக்கு உரை தந்துள்ளார்.

ஈக்காடு சபாபதி முதலியார்

1951-இல் திருவாளர் இரத்தினவேலு முதலியாரின் புதல்வராகிய புலவர் ஈக்காடு-சபாபதி முதலியார் எழுதியது திருக்குறள் விளக்கவுரை ஆகும்.

நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை 850 பக்கங்களில் 'திருக்குறள் புதுஉரை' எனும் தலைப்பில் 1954-இல் நூல் வெளியிட்டுள்ளார்.

கா. சுப்பிரமணியம் பிள்ளை

திருக்குறள், தெளி பொருள் விளக்கப் பொழிப்புரையுடன் எனும் தலைப்பில் திருக்குறள் உரை தமிழறிஞர் கா. சுப்பிரமணியம்பிள்ளை M.A.ML, அவர்களால் 1928-இல் வெளியிடப்பட்டுள்ளது.

ச. சாம்பசிவன்

மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலரும், மதுரை செந்தமிழ்க் கல்லூரி தமிழ் விரிவுரையாளருமான பண்டித வித்துவான் ச.சாம்பசிவன் 1970-இல் 1ரூ 25 பைசா விலையில் வெளியிட்ட நூல் வள்ளுவர் தெள்ளுரை ஆகும்.

புலவர் மா.க. காமாட்சி நாதன்

'திருக்குறள் செம்பொருட்சிற்றுரை' எனும் 352 பக்கங்களைக் கொண்ட நூலை, 1987-இல் திருவருட்பாச்செல்வர் புலவர் மா.க.காமாட்சி நாதன் எழுதி வெளியிட்டுள்ளார். புலவர் ச. சீனிவாசன் 1992-இல் 'திருக்குறள் எளிய உரை' எனும் உரையினை வெளியிட்டுள்ளார்.

மு. இரா. கந்தசாமிக் கவிராயர்

கழகப்புலவர் சு.அ. இராமசாமிப்புலவர்(1944), அயோத்திதாசப்பண்டிதர் (1914), மு.இரா. கந்தசாமிக் கவிராயர் (1950) வேங்கடராமய்யா(1952), பேராசிரியர் மயிலை சிவமுத்து(1960இல் திருக்குறள் இனிய எளிய உரை என்ற தலைப்பில் 517 பக்கங்களில் 5ரூபாய் 25 பைசா விலையில் வெளியிட்டுள்ளார்), பாலூர்க் கண்ணப்பர்(1953), சே.கிருட்டிணன், திருச்சிராப்பள்ளி ஜி. வரதராசன், (1954) பா.சு. சுப்பிரமணியனார், சகதேவனார், பால்வண்ணனார், சாமி சிதம்பரனார், (1959) பேராசிரியர் சி. இலக்குவனார், 1959. முனைவர் வ. சுப. மாணிக்கம்(1991), முனைவர் மு. வரதராசன் (1949 மே மாதத்தில்) பேராசிரியர் மு.

கோவிந்தசாமி, (1962) வெ.கண்ணையனார் (1954), தி.பொ.பழநியப்பனார், பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார், வீரமாமுனிவர், முகவை இராமானுஜக் கவிராயர் (1840-1862) கவிராஜ பண்டிதர்(1949), அ.சக்கரவர்த்தி நாயனார் (1949), கி.ஆ.பெ.விசுவநாதம், பொன்னம்பலம் இராமநாதன், ஞானபூபதியார், யாழ்ப்பாணத்து நவ்வலியூர் சி.கந்தையாபிள்ளை (1949), மு.கு.சுப்பிரமணியனார், தமிழ்த்தென்றல் திரு.வி.க. (1939 திருக்குறள் விரிவுரை, திருக்குறளார் வீ.முனிசாமி, பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார் (1970), மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் (1969), தமிழ் மரபுரை சரவணப் பெருமாளையர் (1838), களத்தூர் வேதகிரி முதலியார் (1850, 1856), சுகாத்தியர் எனும் டி.எம்.ஸ்காட் (1889), சுந்தரனார்(1893), காயாமொழி குமரகுருபரர் (1928), பி.எஸ்.சுப்பிரமணிய சாத்திரியார்(1939), ச.வெள்ளைச்சாமி(1954), எம்.இ.வீரபாகு(1954), அரசுமணி(1960), பேராசிரியர் மு.பெ.மு.இராமசாமி(1991), இரா.இளங்குமரனார்(1990), நாவலர் இரா.நெடுஞ்செழியன் (1991-இல் 801 பக்கங்களில்) கலைஞர் மு.கருணாநிதி(1996), பேராசிரியர் அ.சங்கரவள்ளிநாயகம்(1997), பேராசிரியர் எ.சு.இராமகிருட்டிணன்(1991), வழக்கறிஞர் கு.ச.ஆனந்தன்(1986), முனைவர் கு.மோகனராசு(1994), முனைவர் இரா.சாரங்கபாணி(1999), கு.மா. பாசுப்பிரமணியன், பேராசிரியர் ஐயன் பெருமாள் (1973), தி.மாணிக்க வாசகம், பேராசிரியர் சங்கரராசுலு, பாவலர் க.பாலகிருட்டிணன், புலவர் செந்துறை முத்து(1967), ஆ.அரங்கநாதன்(1933), பேராசிரியர் சாலமன் பாப்பையா(1999), முனைவர் நவராசு செல்லையா(1999), முனைவர் பா. வளன் அரசு(2001),★ முனைவர் தமிழண்ணல்(1999), எழுத்தாளர் சுஜாதா, புலவர் வி.பொ. பழநிவேலனார்(1999), ஆ.வே.இராமசாமி (2001), இரா.இராசேந்திரன் தமிழ்வேட்பன், அ.ஆறுமுகம், வே.கபிலன், இரா.கனகசுப்புரத்தினம்(2000) மேலகரம் முத்துராமன் (1999) முனைவர் கு.சுந்தரமூர்த்தி, முனைவர் பூவண்ணன், முனைவர் ந. சுப்புரெட்டியார் (1993)மாவண்கிள்ளி, கோ. பார்த்தசாரதி, பவானிதாசன், மு.இராமசுப்பிரமணியன்(1988) அரிமதிதென்னகன் (1995) முனைவர் செ. சந்திரன் (2001) முனைவர் அர. சிங்காரவேலன், புலியூர்க்கேசிகன், பாவலர் பெருஞ்சித்திரனார், முனைவர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் நா.விவேகானந்தன்(1998) ரா.வே. ருத்ரப்பசாமி (திருவள்ளுவநாயனார்

★ 25.2.2001 தினகரன் சிறப்புப்பதிப்பு முதல் பக்கம், திருக்குறள் உரையாசிரியர் கட்டுரை.

அருளி செய்த திருக்குறள் 1967 நாகர்கோவில்) சுந்தரசண்முகனார் (1966) புலவர் சி. இராசியண்ணன் (1993) இப்படி பட்டியல் தொடர்கிறது.

தொடரும் பட்டியல் இதோ....

புலவர் குழந்தை (1949)

பாவேந்தர் பாரதிதாசன்

வடமொழிக் கொள்கையை எதிர்க்கவும், பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பவும், தமிழ் மக்களிடையே திருக்குறளுக்குப் புதிய உரை கூறி ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்தவர்கள் புலவர் குழந்தை பாவேந்தர் பாரதிதாசன் ஆவர்.

ச. தண்டபாணி தேசிகர்

சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பெருந்தொண்டு புரிந்த ஆராய்ச்சியாளர் ச.தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைவளம், (1951) திருக்குறள் உரைக்களஞ்சியம் பதிப்பித்து அழியாப்புகழை எய்தியவர். திருக்குறள் உரைகளை ஒப்பிட்டு நோக்கும் பார்வையும் வழங்கியவர்.

திருக்குறள் குறித்த தொண்டாற்றி தமிழ் இலக்கிய வரலாற்றில் மறந்திட இயலாதவர்கள்

எம். வீராசாமிப்பிள்ளை (1849), ஆர்.எம்.பாபு (திருவள்ளுவர் குறள் 1870), கிட்டா குப்புசாமி நாயுடு (1873), முருகேச முதலியார் (1885), சுந்தரமுதலியார் (1893), கிருஷ்ணாம்பேட்டைக் குப்புசாமி முதலியார் (1924) கிருஷ்ணசாமி நாயுடு (1951), வை.சுந்தரேசவாண்டையார் (1953), என்.எம்.ராஜன் நாகர்கோவில் (1954) புலவர் அ. மாணிக்கம் (1988), பால்வண்ணன் (1952).

தி. பட்டுசாமி ஓதுவார்

தி.பட்டுசாமி ஓதுவார் (திருக்குறள் உரைக்கொத்து 1957 முதல் ....) வெளிவந்தது. திருப்பனந்தாள் காசிமடம் இந்தப் பணியினைச் சிறப்பாகச் செய்தது.

வித்துவான் டி.பி. பழனியப்பபிள்ளை (1949), அரசுமணி(1960), நெல்லை சுப்பிரமணியன் (1960), எச். வைத்தியநாதன் (1961), கி.வா.ஜகந்நாதன் (1963) ப.மாப்பிள்ளையன் (1965),தவத்திரு சண்முகனார் (1966), கோ. சங்கரராசன் (1968), ஆர். கன்னியப்ப நாயக்கர் (1968), ப.அருணாசலம் (1968), அழகரடிகள்.

தென்பட்டினம் மீனாட்சி சுந்தரனார்

1930-இல், வள்ளுவரும் மகளிரும் எனும் தலைப்பில் *172* பக்க நூலை வெளியிட்ட தென்பட்டினம் மீனாட்சி சுந்தரனார் அதில் பல குறள்களுக்கு விளக்கவுரை தந்துள்ளார்.

திருக்குறள் உரையாசிரியர்கள்

ஆசிரியர் அறிஞவேள் *(1948)*, கோவை மாவட்டம் மானுப்பட்டி உடுமலைத் தாலுகா கா. குப்புசாமிக் கவுண்டர் (குறளும் கீதையும்) *(1953)*, புலவர் தெய்வநாயகம் *(1970)* (வள்ளுவர் வாழ்த்தும் ஐந்தவித்தான் யார்?), ஜீவபந்து ஸ்ரீபால் *(1958)* (திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்), இளம்பிறைமணிமாறன், (திருக்குறட்பாவை), *(1998)*, சி.நடராஜன், தெய்வப்புலவர் திருவள்ளுவர் கண்ட தெய்வமும் தெய்வ வழிபாடும், மதுரை, *1985*,தந்தை பெரியார், திருக்குறளும் பெரியாரும், சென்னை *1983*, திருக்குறளும் மனுதர்மமும், பெரியார், *1948*, கோவில்பட்டி டாக்டர் A.G.கோமதி அம்மாள் LMP, மாணவர் திருக்குறள், *1949*, சித்தாந்த பண்டித பூஷணம் சைவத்திரு ஆ. ஈசுவரமூர்த்திப்பிள்ளை திருக்குறள் பொதுநூலா? *1959*, கவி. தஞ்சைராமையாதாஸ் திருக்குறள் இசை அமுதம் *1961*, திருக்குறளில் கற்பனைத்திறனும் நாடக நலனும், க.த.திருநாவுக்கரசு, சென்னை *1982*, அகப்பொருள் மரபும் திருக்குறளும், மு. சண்முகம் பிள்ளை, *1980*, இ.சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம் *1971*, குறள் கூறும் சமுதாயம் *1975*, குறள் கூறும் சமயம் *1979* காமாட்சி ஸ்ரீனிவாசன், *(1975)*, திருக்குறள் இனிய உரை புலவர் இரா. நாராயணசாமி, *1957*, பு.ஆ. முத்துக்கிருஷ்ணன் திருக்குறள் இசைமலர், வள்ளுவர் வகுத்த பொருளியல் தி.முருகரத்தினம் தொகுப்பு, *1975*, குறார் கூறும் இறைமாட்சி டாக்டர் தி. முருகரத்தினம் *1974*, தேனி, ஸ்ரீ ஸ்வாமி, சங்காரனந்தர், வள்ளுவம் வழங்கும் வாழ்க்கைநெறி, *1994*, தி. மாணிக்கவாசகம், (மாசி) B.A, வான்புகழ் வள்ளுவர், *1961*, சென்னை ச. கந்தசாமி முதலியார், வள்ளுவர் நகைச்சுவை, வள்ளுவர் மருந்து, வள்ளுவர் வேதாந்தம், *1964*, பேராசிரியர் இரா. குமாரசாமி, திருக்குறள் மூலிகைகள், சுசீந்திரம், *1981*, மீ. கந்தசாமிப் புலவர், வள்ளுவர் வகுத்த அரசியல், திருவைகுண்டம், *1966*, ம.பொ. சிவஞானம், திருக்குறளிலே கலைபற்றிக் கூறாத தேன்? சென்னை *1974*, மறைமலையடிகள், திருக்குறள் ஆராய்ச்சி, *1957* கவரப்பட்டிஆ. செகநாதன், வள்ளுவச் செல்வம், தனித்தமிழ் இலக்கியக் கழகம் நெல்லை, *1969*, மு. கிருஷ்ணசாமி, வள்ளுவமும் மேலாண்மையும், *1989*, செல்லூர்க்கிழார்

செ.ரெ. இராமசாமி பிள்ளை திருக்குறள் பொருள் விளக்கம் 1959, புலவர் மு. தெய்வநாயகம், திருவள்ளுவர் கிறிஸ்தவரா? 1969, திருவள்ளுவர் போற்றும் அருட்செல்வம் யாது? 1974 திருவள்ளுவர் பெருமைப்படுத்தும் நீத்தார் யார்? 1971, நெல்லை. ப. இராமசாமி, திருவள்ளுவர் அறிவு ஆலயம், 1960, டாக்டர் இரா. அருளப்பா பேரின்ப விளக்கம், 1975.

ஜெகவீரபாண்டியன்

திருக்குறட் குமரேச வெண்பா மூலமும் உரையும் ஆசிரியர் ஜெகவீரபாண்டியன் 1925களில் தொகுதிகளாக, தொகுதிகளில் புத்தகங்களாக வெளியிட்ட உரைகள், அத்துவைத விவேக சமாஜத்திலொருவரும், திருமூலர் மரபு- ஸ்ரீமத் சாந்தாநந்த சுவாமிகளின் சிஷ்யர்களில் ஒருவருமாகின்ற திரு.குருசரணாலயன் எழுதி, சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பண்டிதர் டி. கனகசுந்தரம்பிள்ளை திருத்தி 1922-இல் வெளியிடப்பட்ட திருக்குறள் வசனம் (216 பக்கங்கள்), பொய்யாமொழிக்குப் பொழிப்புரை, (திருக்குறள் தெளிவு) லிப்கோ வெளியீடு, (1960களில்), திருக்குறள் பி.ஏ, செல்வராஜ் திருக்குறள் எளிய உரை, (1973), கவிஞர் கண்ணதாசனின் திருக்குறள் காமத்துப்பால் உரை, 1977, கவியோகி சுத்தானந்த பாரதியார் 1937 திருக்குறளின்பம் 248 பக்கங்கள்.

மு.ரா.அருணாசலக்கவிராயர்

மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான் மு.ரா.அருணாசலக்கவிராயர் திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும், மதுரை 1930, (436 பக்கங்கள்), தமிழ் வேதமாகிய திருக்குறள் வசனம் மதுரை, 1913, 266 பக்கங்கள், சு.பேச்சியப்பப்பிள்ளை மாசு துடைப்போம், சங்கரன்கோவில் 1988, எஸ்.பி.எஸ், திருக்குறள் விளக்கம் உரையுடன், திருநெல்வேலி, 1968, 286 பக்கங்கள், பி.ஸ்ரீ. வள்ளுவரும் சாக்ரடீசும், 1970, ரா.பி. சேதுப்பிள்ளை, வழி வழி வள்ளுவர் 1953, காருகுறிச்சி அடுக்குமொழி பி. ஆவுடையப்பன், இலக்கத் திருக்குறள், 1948, சொ.சி. இராசாராம், வள்ளுவரும் வாழ்வியலும், 1989.ப. முருகன், வள்ளுவம் பன்னோக்குப் பார்வை, 1991.

மயிலை சீனி. கோவிந்தராசனார்

திருக்குறள் நாடகம் எனும் தலைப்பில் 1927-இல் திருக்குறளின் பலபாடல்களுக்கு எழுதிய உரை.

கி.சு.வி. இலட்சுமி அம்மணி

திருச்சினாப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலுகா மருங்காபுரி

ஜெமீன்தாரிணி ஸ்ரீமதி கி.சு.வி. இலட்சுமி அம்மணி அவர்களால் இயற்றப் பட்டு 1929-இல் 458 பக்கங்களில் வெளியிடப்பட்ட திருக்குறள் தீபாலங்காரம்.

பரமசிவன் பிள்ளை

திருநெல்வேலி டி.எஸ். பரமசிவன் பிள்ளை 'திருக்குறட்சாரம்' எனும் 236 பக்க நூலில் திருக்குறளுக்கு பலபாடல்களுக்கு, 1931-இல் உரை எழுதியுள்ளார். சிதம்பரம் கருணானந்த சுவாமிகள் 1869 பரிசோதித்து, தி.செல்வ கேசவமுதலியார் பதிப்பித்த திருக்குறள்,

எம். வீரசாமிபிள்ளை 1875, திருமயிலை முருகேச முதலியார் 1885, வி. சுந்தர முதலியார், 1893, நாராயணசாமி முதலியார் 1893, யூ.பி. தெய்வநாயக முதலியார் 1904, வி. கிருஷ்ணமாச்சாரியார் 1906, சீகாழி பி.டி. இரத்தினம்பிள்ளை 1909, கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் 1911, டி.நாராயண ஐயங்கார் 1915, திருவனந்தபுரம் தி. இலக்குமணப்பிள்ளை 1918, வித்துவான் சிவாநந்தையர் 1918, ச.தா. மூர்த்தி முதலியார் 1920, தச்சநல்லூர் இலக்குமணப் போற்றி ஐயா, (திருக்குறள்: விளக்கம்: வினாவிடை 1920), செ.மு. வேலு முதலியார் 1920, வ.ஞா. கணேச பண்டிதர், 1921, மணி. திருநாவுக்கரச முதலியார், டி.ஆர். திருவேங்கடம்பிள்ளை 1922, ஜே.எம். நல்லாசாமி பிள்ளை 1923,எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் 1923,வா. மார்க்க சகாய செட்டியார் 1924, கே. பொன்னுசாமி நாட்டார் 1925 என். கபிலமூர்த்தி பிள்ளை 1926, கி. குப்புசாமி முதலியார் 1926.

M.S. பூர்ணலிங்கம் பிள்ளை

M.S. பூர்ணலிங்கம் பிள்ளை 1929(திருக்குறள் ஆராய்ச்சி), தி.அ. அனந்தநாத நயினார் 1932, ஏ. அரங்கநாத முதலியார் 1932, ஏ. இராமலிங்கம்,கிருஷ்ணசாமிப்பாவலர், தாச்சி அருணாசல முதலியார், ஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள், ஆ. அரங்கநாத முதலியார், பூ.சு. கோவிந்தராஜன், அ.கி. பரந்தாமனார் (திருக்குறளும் புதுமைக்கருத்துக்களும் எனும் தலைப்பில் 1963இல் தனியாக நூலையும் வெளியிட்டுள்ளார்.), கா. பொன்னுசாமி நாட்டார், எஸ்.என்.ஸ்ரீராமதேசிகன், துடிசைக்கிழார் அ. சிதம்பரநாதன் (1943), மு.இராசாக் கண்ணனார் (1943),ஆறுமுகநாவலர் (1861)1897-இல் சென்னை வடிவேலு செட்டியார் 16 பக்கங்களில் 'முதற் குறள் வாதம்' என்னும் 16 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். இதற்கு மறுப்பாக 1898-இல் நாகை வேதாசலம் பிள்ளை என்னும் மறைமலையடிகள் முதற்குறள் வாத நிராகரணம் என்னும் 50 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார்.

தமிழகத்தில் திருக்குறளுக்கு வேறுவேறு பொருள் காண்பது, வேறு வேறு உரை சொல்வது என்பது காலங்காலமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறு திருக்குறளுக்கு உரை செய்தவர்கள், திருக்குறள் குறித்து ஆய்வு நூல் எழுதியவர்கள் ஏராளம்; ஏராளம். இப்பட்டியலில் இடம்பெறாத நூல்களும் உண்டு. திருக்குறள் உரை நூல்கள் 300 ஐக் கடந்து விட்டன என்பர் க. திருநாவுக்கரசு.★

வ.உ.சி.யின் திருக்குறள் ஆய்வுகள்

1917-இல் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்து மகிழ்ந்த வ.உ.சி. தொடர்ந்து திருக்குறள் ஆய்வினை மேற்கொண்டு வந்தார்.

திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொண்ட வ.உ.சி. திருக்குறள் குறித்த சொற்பொழிவுகளையும் தலைமை உரைகளையும் நிகழ்த்தி வந்தார்.

தென்காசி திருவள்ளுவர் கழகம்

19-2-1927-இல் திருக்குறள் அட்டாவதானியார் காலஞ்சென்ற தி.ப.சுப்பிரமணிய தாஸ் அவர்களின் அரிய முயற்சியால் நெல்லை மாவட்டம் தென்காசியில் திருவள்ளுவர் கழகம் நிறுவப்பெற்றது. இறைவன் அருளால் ஆண்டுதோறும் வள்ளுவருக்கு விழா எடுத்துச் சிறப்பித்து இன்றுவரை அக்கழகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

1928-ஆம் ஆண்டு தென்காசியில் திருவள்ளுவர் கழகம் நடத்திய முதல் ஆண்டு விழாவில் தலைமை ஏற்றுச் சிறப்பித்தவர் தேசபக்தர் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம்பிள்ளை ஆவார்★★

தமிழ்ப்பொழில்

1929-30களில் வெளிவந்த 'தமிழ்ப்பொழில்' என்னும் இதழில் துணர் 5, மலர் 6, 9, 10களில் வ.உ.சி. திருவள்ளுவர் திருக்குறள் 'பாயிர ஆராய்ச்சி' குறித்து விரிவான கட்டுரை எழுதியுள்ளார்.

தமிழ்ப்பொழில் துணர் 6, 1930-32இல் பக்கம் 456 முதல் 462 வரை தனது திருக்குறள் பாயிர ஆராய்ச்சி குறித்து தொடர்ந்து எழுதியுள்ளார்.

திருக்குறள் பாயிர ஆராய்ச்சி

''பாயிரம் என்பது நூன்முகம்; நூற்குமுகம் போன்று விளங்குதலால் அது நூன்முகம் எனப்பட்டது. இக்காலத்து வழங்கும் திருவள்ளுவர்

★ திருக்குறளும் திராவிடர் இயக்கமும், சென்னை 1997, பக் 42.

★★ பொற்குவியல், தென்காசி, 1978, பக்.12

திருக்குறட்சுவடிகளிலெல்லாம் 'கடவுள் வாழ்த்து' 'வான் சிறப்பு' 'நீத்தார் பெருமை' 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. ஆனால் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும், 'உரைகோளாளன்' முதலியோர்களால் கூறப்பெற்ற சிறப்புப்பாயிரம். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப்பாயிரம்' என்று வ.உ.சி. அந்தக் கட்டுரையில் துவங்கி, விரிவாக, ஆதாரங்களுடன் எழுதிக்கொண்டே செல்வார்.

'துறவறவியலின் கண் 'துறவு' என்ற ஓர் அதிகாரமும், 'மெய்யுணர்தல்' என்ற ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறிய வள்ளுவர், பாயிரத்தின்கண் 'நீத்தார் பெருமை' என்னும் ஓர் அதிகாரமும் 'கடவுள் வாழ்த்து' என்னும் ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறுதல் மிகையேயாம்' என்றும் வலியுறுத்துவர் வ.உ.சி.

ம.ரா. அரசு

தமிழறிஞர் டாக்டர் ம. ராசமாணிக்கனாரின் மகனார் ம.ரா. அரசு டிசம்பர் 1989-இல் வ.உ.சி.யின் சில கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். அந்த நூலில் 111வது பக்கம் முதல் 140வது பக்கம் வரையில் வ.உ.சியின் திருவள்ளுவர் திருக்குறள் பாயிர ஆராய்ச்சி எனும் கட்டுரை இடம் பெற்றுள்ளது.(குறள் ஆர்வலர்கள் அதனை முழுவதுமாகப் படித்துக் கொள்வார்களாக.)

திருக்குறள் உரை வெளியிடுதல்

1929, 1930, 1931களில் 'தமிழ்ப்பொழில்' இதழில் திருக்குறள் குறித்த ஆய்வுக்கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வந்தவர் வ.உ.சி. 1935-இல் ***'காகிதம், மை, கட்டு நூல் முதலியனவெல்லாம் சுதேசியம்'*** என்ற அறிவிப்புடன் திருக்குறள் அறத்துப்பால் உரையினை வஉசி வெளியிட்டார். இதோ அந்த நூலின் முகப்புப்பக்கம்....

சமர்ப்பணம்

தூத்துக்குடிக்கு அருகிலுள்ள சிலுக்கம்பட்டி அ.செ.சு. கந்தசுவாமி ரெட்டியார், அ.செ.சு. முத்தையா ரெட்டியார் என்னும் இரண்டு வள்ளல்களுக்கு வ.உ.சி. தனது திருக்குறள் உரையினை சமர்ப்பணம் செய்து நேரிசையாசிரியப்பா 24 வரிகளில் பாடியுள்ளார்.

உ

தெய்வப் புலமைத்

திருவள்ளுவ நாயனார்

திருக்குறளும்,

தேசாபிமானி

வ. உ. சிதம்பரம்பிள்ளை

விருத்தியுரையும்.

முதற் பாகம்:

சிறப்புப்பாயிரத்துடன்

அறப்பால்.

1935.

திருவள்ளூர் திருக்குறள் அறப்பால் எனும் தலைப்பில் 9-2-1935-இல் தூத்துக்குடியிலிருந்து வெளிவந்த நூலுக்கு வ.உ.சி. எழுதிய முன்னுரை இதோ....

உ

திருவள்ளுவர் திருக்குறள்.

அறப்பால்.

முன்னுரை.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் திருவள்ளுவ நாயனார் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில், அறப்பாலுரை மூலத்துடன் அச்சாகி முற்றுப் பெற்றது. அதனை அச்சிடத் தொடங்கிய காலையில் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், ஆகிய மூன்று பால்களின் உரைகளையும் மூலத்துடன் அச்சிட்டு, அவற்றை ஒரே புத்தகமாக வெளியிட வேண்டுமென்று நினைத்தேன். இப்போது, திருவள்ளுவமாலைச் செய்யுள்களும், மகா வித்வான். மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் முதலிய நால்வர் செய்யுள்களும், அவற்றின் உரைகளும், அறப்பால் மூலமும் உரையும், முந்நூறு பக்கங்கள் ஆகின்றன. பொருட்பால் மூலத்திற்கும் உரைக்கும் முந்நூறு பக்கங்களுக்கு மேலாகு மென்றும், இன்பப்பால் மூலத்திற்கும் உரைக்கும், திருவள்ளுவரது காலம், சாதி, சமயம், திருக்குறளை இயற்றியற் குரிய காரணம், அக் காலத்துத் தமிழ் நாட்டின் நிலைமை, திருக்குறளுக்கு ஆதாரமான நூல்கள், முதலியவற்றைப் பற்றிய எனது ஆராய்ச்சிக் குறிப்புக்களுக்கும் சில ஏறக்குறைய முந்நூறு பக்கங்கள் ஆகு மென்றும் நினைக்கிறேன். அதுபற்றி, ஒவ்வொரு பாலையும் அதனதன் உரையையும் தனித்தனி ஒவ்வொரு புத்தகமாக வெளியிடத் துணிந்து, இப்பொழுது அறப்பாலையும் அதன் உரையையும் ஒரு புத்தகமாக்கி வெளியிடுகின்றேன்.

அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது; 12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது; 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது. மீதக் குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருக்கக் கூடும். அறப்பாலில் பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்கு வேறாக 151 மூல பாடங்களை

மணக்குடவரும் மற்றும் மூன்று உரையாசிரியர்களும் கொண்டுள்ளார்கள். பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்கு வேறாக 74 மூல பாடங்களை யான் கொண்டுள்ளேன். அவற்றில், 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர்கள் கொண்டுள்ள பாடங்கள். மீதம் 44 பாடங்கள்தான் யானாகக் கொண்டுள்ள பாடங்கள். அப்பாடல்களை யான் கொண்டதற்குரிய காரணம், அப் பரிமேலழகர் பாடங்கள் ஏடு பெயர்த்தெழுதியோரால் நேர்ந்த பிழைப் பாடங்கள் என யான் கருதியதே. யான் கருதியது போலவே, பழம் பெரும் புலவரான மகா வித்வான். மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களும் பல பிழைகள் அக்காரணத்தால் மூலத்தில் புகுந்துள்ளன என்று கருதியிருக்கிறார்கள். அவர்கள் திருக்குறள்-பரிமேலழகருரை-ஆறுமுக நாவலர் பதிப்புக்குக் கொடுத்துள்ள சிறப்புச் செய்யுள்களில் ஒன்றில் ''ஏட்டுவரைந் தெடுத்துணர்ந்து வருநாளி லெங்கணுஞ்சா லெழுத்துக்குற்றம், ஓட்டும் வகை யுணராராய்ப் பரம்பரை யொன்றே கருதி யொழிந்தா ரந்தோ'' என்று கூறியிருத்தல் காண்க.

இந்நூலையாவது அச்சுப் பிழை இல்லாமல் அச்சிடுவிக்க வேண்டுமென்று யான் மிக்கவாக் கொண்டிருந்தேன். அதற்காக அதன் புரூவ்களை என்னுடன் பார்க்க வேண்டுமென்று என் நண்பர்களான மதுர ஆசிரியர். திரு.க.ரா.இராதாகிருஷ்ணைய ரவர்களையும், பிரசங்க ரத்தினம். திரு.மு. பொன்னம்பலம் பிள்ளை யவர்களையும் வேண்டிக் கொண்டேன். ஒவ்வொரு புரூவும் என்னால் மூன்று முறையும், அவர்களால் இரண்டு முறையும் படிக்கப்பட்டது. அவ்வாறு படிக்கப்பட்டும், அச்சுப் பிழைகள் ''மற்றொன்று சூழினும் தான்முந்துறும்'' என்றபடி எங்கள் மூவர்களுக்கும் தெரியாமல் நூலுள்ளே நுழைந்து, ''பிழை திருத்தம்'' என்னும் ஒரு பக்கத்தைக் கவர்ந்து விட்டன. இராதாகிருஷ்ண அய்யரவர்கள் என்னுடன் புரூவ் பார்த்ததோடு எனது உரையை ஆங்காங்குச் சரிபார்த்தும் தந்தார்கள். பொன்னம்பலம் பிள்ளையவர்கள் புரூவ் பார்த்ததோடு அய்யரவர்களும் யானும் எனது உரையில் சிற்சில இடங்களில் பொருத்தமான சொற்களைப் பெய்தற்காக ஆலோசனை செய்து கொண்டிருந்த போது பொருத்தமான சில சொற்களைச் சொல்லியும் உதவினார்கள். அவ்வுதவிகளுக்காக அவ்விருவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனங்களை அளிக்கிறேன்.

இந்நூலை அச்சிட்டுக் கட்டுதற்கு எனக்குப்பொருள் அளித்தவர்கள் இந் நகரின்கண் பல சீர்களும், சிறப்புக்களும் பெற்று வாழும்

புதுக்கோட்டை மிட்டாதாரும் பெரிய நிலச்சுவான்தாரும், அதி தனவந்தரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்டு போர்டு அங்கத்தினரும், திருச்செந்தூர் திரு. சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கௌரவ தருமகர்த்தருமாகிய திரு.**அ.செ.சு.கந்தசுவாமி ரெட்டியாரவர்களும்,** அவர்களது அவிபக்த அருமை மைத்துனரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்டு போர்டு அங்கத்தினரும், தூத்துக்குடி ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி வைஸ்பிரசிடண்டுமாகிய திரு.**அ.செ.சு.முத்தையரெட்டியார் அவர்களுமே.** எனது நண்பர்களிற் சிலர் என்னைப் பார்த்து ''நீங்கள் அதிர்ஷ்ட சாலிதான். மகாத்மா காந்திக்கு ஜமன்லால் பஜாஜி கிடைத்தது போல உங்களுக்கு ரெட்டியார்கள் கிடைத்திருக்கிறார்கள்'' என்று சொல்வதுண்டு. அதற்கு ''நானும் கடவுள் ஞானத்திலும், தேசபக்தியிலும், பாஷாபி மானத்திலும் குறைந்தவ னல்லவே'' என்று பதில் சொல்வதுண்டு. அவ்விரு வள்ளல்களும் இன்னும் பல பெண்மக்களும் ஆண் மக்களும் பெற்றுப்பெருகி ''வாழையடி வாழையென'' இவ்வுலகின்கண் எஞ்ஞான்றும் இன்பமும் புகழும் எய்தி வாழ்ந்திருக்கும்படி யாகவும், அவர்கள் வீட்டு வாயில்கள் நித்திய கல்யாண வாயில்களாய் விளங்கும்படியாகவும் அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை யான் இறைஞ்சுகின்றேன்.

தூத்துக்குடி **வ.உ.சிதம்பரம் பிள்ளை.**

9-2-35.

வ.உ.சியின் திருக்குறள் அறத்துப்பால் உரையில் உரைப்பாயிரமாக 9-1-1935-இல் தூத்துக்குடியிலிருந்து எழுதியது இதோ.....

உ

திருவள்ளுவர் திருக்குறள்.

(வ.உ.சிதம்பரம் பிள்ளை உரையுடன்)

உரைப்பாயிரம்.

பூவுலகின்கண் தோன்றி நிலவுகின்ற மொழிகள் பல. அவற்றுள் நம் தமிழ் மொழியில் ஆக்கப்பட்ட நூல்கள் எண்ணில. அவற்றில், அழிந்துபோனவை பல; அழியாது நிற்பவை சில. அச் சிலவற்றில் சிறந்தவை மிகச் சில; சாலச் சிறந்தவை மிக மிகச்சில. அந்நூல்களை ''மேற்கணக்கு'' எனவும், ''கீழ்க்கணக்கு'' எனவும் பகுத்துத் தொகுத்துள்ளார்

நம் முன்னோர். மேற்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவை ''பத்துப் பாட்'' டிலுள்ள நூல்கள் பத்தும், ''எட்டுத்தொகை'' யிலுள்ள நூல்கள் எட்டுமாம். கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவை ''பதினெண் கீழ்க்கணக்கு''கிலுள்ள நூல்கள் பதினெட்டுமாம்.

அப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய திருக்குறள் என்று வழங்கும் முப்பால் திருவள்ளுவரால் இயற்றப்பெற்றது. அது மக்கள் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், அவற்றை அடையும் நெறிகளையும் ஞாயிறு போல விளக்குகின்ற ஓர் அருமையான நூல். அதன் ஒப்புயர்வற்ற பெருமை, அதனை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய நூலென்றும், அதன் ஆசிரியரைத் தத்தம் சமயத்தவரென்றும் கூறிவருகின்ற தொன்றாலேயே நன்கு விளங்கும். அஃது அறப்பால், பொருட்பால், இன்பப்பால் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அம்மூன்று பகுதிகளையுடைய காரணத்தால், அது முப்பால் எனப்பெயர் பெற்றது.

அம் முப்பால்களில் அறப்பால் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், வீட்டியல், ஊழியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், பொருளியல், படையியல், நட்பியல், குடியியல் என்னும் ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இன்பப்பால் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற் கூற்று என்னும் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இப் பதினைந்து இயல்களும் நூற்றுமுப்பது அதிகாரங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்துக் குறள் வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

திருக்குறட் சுவடிகளில் பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களாகக் காணப்படும், 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு', 'நீத்தார் பெருமை' என்னும் மூன்று அதிகாரப்பாக்களும் திருவள்ளுவரால் இயற்றப் பட்டவை யல்ல வென்றும், அவை திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்காலமும் முந்திய உரையாசிரியர்கள் காலத்திற்கு முற் காலமாகிய இடைக்காலத்துப் புலவர் ஒருவரால் பாடிச் சேர்க்கப்பட்டவை யென்றும் யான் கருதுகிறேன். ★ அவ்வாறு யான் கருதுவதற்குரிய காரணங்களிற் சில:- *(1)* இம்மூன்று

★ கருவூர் ஈழத்துஅடிகள், தனது பெரியபுராண ஆராய்ச்சி நூலில், 'திருக்குறளும் அதிற்போந்தஇடைச்செருகலும்' எனும்தலைப்பில் இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார், சென்னை 2ஆம் பதிப்பு, *1973*, பக்.*30*, *31* (நூல் ஆசிரியர் குறிப்பு இது)

அதிகாரங்களிலும் காணப்படும் பாக்கள் நூலின் பாக்களைப் போலச் சொற்செறிவும், பொருட்செறிவும் உடையன அல்ல. (2) இப் பாக்களிற் பலவற்றின் பொருள்கள் பல தடவைகளுக்கு இடம் கொடுக்கின்றன. (3)''மெய்யுணர்தல்'', ''துறவு'' என்னும் அதிகாரங்கள் நூலின்கண் இருக்கின்றமையால், ''கடவுள் வாழ்த்து'',''நீத்தார் பெருமை'' என்னும் அதிகாரங்களைப் பாயிரத்தில் கூற வேண்டியதில்லை. (4) ''மெய்யுணர்ந்த'' லில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையும், ''கடவுள் வாழ்த்'' தில் கடவுளுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டு அதிகாரங்களையும் இயற்றியவர் ஒருவரல்லரென்பது நன்றாக விளங்கும். அவ்வாறே, ''துற''வின் பாக்களையும், ''நீத்தார் பெருமை'' யின் பாக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவ்விரண்டு அதிகாரங்களையும் இயற்றியவர் ஒருவரல்ல ரென்பது நன்றாக விளங்கும். மழையைச் ''சிறப்பிற் றணிப்பாரு மில்லை, வறப்பிற் றருவாருமில்'' லாகையால் ''வான் சிறப்'' பைக் கூறுதல்ால் பயன் ஒன்றும் இல்லை.

ஆயினும், நம்மவர்களிற் பலர் அம் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவராலே இயற்றப் பட்டவை என்று கருதி வருகின்றமையால், அவர் மனம் நோகும்படியாக அம் மூன்று அதிகாரங்களையும் திருக்குறளிலிருந்து நீக்கி விட யான் விரும்பாதவனாய், அவை இடைக் காலத்தில் வந்து சேர்ந்த பாயிரமென்று யாவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அவற்றிற்கு ''இடைப் பாயிரம்'' என்னும் தலைப்பெயர் கொடுத்து, அவற்றை எனது உரையுடன் திருக்குறட் கையெழுத்து ஏடுகளிலும் அச்சுப் புத்தங்களிலும் அவை காணப்படுகிற இடத்திலேயே சேர்த்துள்ளேன். திருவள்ளுவ மாலைப் பாக்களைத் திருத்தணிகைச் சரவணப் பெருமா ளையரவர்கள் உரையோடும், திரிசிரபுரம் மகாவித்வான் மீனாச்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய நால்வர் பாக்களை எனது உரையோடும் ''சிறப்புப் பாயிரம்'' என்னும் தலைப்பெயருடன் இவ்வுரைப் பாயிரத்திற்கும் இடைப் பாயிரத்திற்கும் இடையில் சேர்த்துள்ளேன்.

திருவள்ளுவ மாலைப் பாக்களிற் சில மேற்கண்ட மூன்று அதிகாரங்களையும் திருக்குறட் பாயிரம் எனக் கூறுகின்றனவே எனின், அப் பாக்களைப் பாடியவர்களாகக் குறிக்கப் பட்டுள்ள புலவர்கள் திருவள்ளுவர் காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்தவர்கள ளென்றும், அவர்களிற் சிலர் தாம் திருக்குறளை படித்த காலங்களில் அதன் பெருமையைப் பற்றிப் பாக்கள் பாடித் திருக்குறட் சுவடிகளிற் சேர்த்தன ரென்றும், அவர்களில்

வேறு சிலர் தமிழ் நூல்களிற் பல அழிவுற்ற காலத்தில் திருக்குறளில் உள்ளடிவ இன்னவை யென்று பிற் காலத்தார் தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தமக்குக் கிடைத்த திருக்குறட் சுவடிகளில் கண்டபடி பால், இயல், அதிகாரங்களின் தொகைகளை வரையறையிட்டுப் பாக்களைப் பாடித் திருக்குறட் சுவடிகளில் சேர்த்தனரென்றும், அப் பாக்களெல்லாம் சேர்ந்து அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தார் ஒருவரால் கொடுக்கப்பட்ட ''திருவள்ளுவ மாலை'' என்னும் தலைப்பெயருடன் வழங்கி வருகின்றன வென்றும் விடையளித்திடுக.

திருக்குறளுக்கு உரை சொல்லியவர்களும், எல்லை மிகுந்தும் எல்லை குறைந்தும் உரை எழுதியவர்களும் பலர் என்பதும், எல்லை மிகாதும் எல்லை குறையாதும் எல்லைப்படி உரை எழுதியவர்கள் பதின்மர் என்பதும் ''**தருமர், மணக்குடவர்,தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையார், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர்** வள்ளுவர் நூற்; கெல்லையுரையெழுதி னோர்'' என்னும் வெண்பாவால் விளங்கும்.

இவ் எல்லை உரைகளுள் பரிமேலழக ருரையும் மணக்குடவ ருரையும் அச்சாகித் தமிழ் நாட்டில் நிலவுகின்றன. இவை தவிர, வேறு மூன்று உரைகள் கையெழுத்துப் பிரதிகளாகத் தமிழ் நாட்டில் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலை முதலிய சிற் சில இடங்களில் காணப்படுகின்றன. அவற்றிற் காணப்படும் சமயக் கோட்பாடு, தமிழ் நடை முதலியவற்றைப் பார்த்து, யான் அவற்றைத் தரும ருரை, தாமத்த ருரை, நச்ச ருரை எனக் கருகின்றேன். அவை முறையே அவ்வுரை யாசிரியர்களால் இயற்றப் பெற்றவை என்பதற்கு வேறு சான்று ஒன்றும் இதுகாறும் கிடைத்திலது. ஆயினும், அவ் உரைகளிற் கண்ட குறட் பாடங்களை யான் எனது உரையில் குறிக்கும் இடங்களில் அவ் உரையாசிரியர்கள் பாடங்கள் எனவே குறித்துள்ளேன். இவ் ஐந்து உரைகளிலும் திருக்குறளின் அதிகாரப் பெயர்களும் வரிசைகளும், அதிகாரக் குறள்களின் வரிசைகளும் வெவ்வேறாயிருக்கின்றன.

இவ் உரைகளெல்லாம் கற்றற்குப் பெரியனவாகவும், அறிதற்கு அரிய தமிழ் நடையில் எழுதப் பெற்றன வாகவும், பிழைப்பட்ட மூல பாடங்கள் சிலவற்றைக் கொண்டவாகவும், சில குறள்களுக்கு நுண்ணிய அறிவுடையார் ஏற்றுக்கொள்ள இயையாத பொருள்களை உரைப்பனவாகவும் காணப்படுகின்றன. அவை பற்றி, திருக்குறளை நேரிய பொருளோடும் பிழைகள் இன்றியும் தமிழ் மக்கள் எளிதில் கற்கும்படியாக அதற்கு ஓர்

உரை இயற்றப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன்; சில ஆண்டுகளுக்கு முன் இயற்றி முடித்துத் திருச்செந்தூர்த் திரு. முருகப் பெருமான் சந்நிதியில் அரங்கேற்றினேன்; இப்பொழுது அச்சிட்டு வெளியிடுகின்றேன்.

பரிமேலழகரை அச்சுப் புத்தகத்தின் இல்லறவியலுள் காணப்படுகின்ற 'வெஃகாமை', 'பயனில சொல்லாமை' என்னும் இரண்டு அதிகாரங்களையும் துறவறவியலுள் சேர்த்தும், துறவற வியலுள் காணப்படுகின்ற 'வாய்மை' 'கள்ளாமை' என்னும் இரண்டு அதிகாரங்களையும் இல்லற வியலுள் சேர்த்தும் இருக்கிறேன். வாய்மையும் கள்ளாமையும் இல் வாழ்வார்க்கும் இன்றியமையாதன வாகலானும், வெஃகாமையும், பயனில சொல்லாமையும் இல்வாழ்வார் கைக்கொள்வதற்கு அரியன வாகலானும், அவை துறவிகள் கைக்கொள்வதற்கு உரியன வாகலானும், முன்னிரண்டு அதிகாரங்களின் பாக்களிற் சில இல்வாழ்வாரைக் குறித்தும் பின்னிரண்டு அதிகாரங்களின் பாக்களிற் சில துறவிகளைக் குறித்தும் பாடப்பட்டிருக்கின்றனமையானும் அவ்வாறு செய்தேன். இஃதன்றியும், நேரியபொருள் கோடலுக்கு இடையூறாக வரிசை யொழுங்கு தவறிக் கிடந்த சிற்சில குறள்களின் வரிசையை ஒழுங்கு படுத்தியுள்ளேன்.

வீடு இல் வாழ்வார் துறந்தார் ஆகிய இரு திறத்தார்க்கும் உரிய தாகலானும், அறத்துப் பாலில் 'வீட்டியல்' என ஓர் இயல் உண்டென்று யான் கேட்டிருக்கின்றமையானும், ''நிலையாமை'' முதலிய நான்கு அதிகாரங்களும் வீட்டியலிற் குரியனவாகலானும், அவற்றை ''வீட்டியல்'' என்று ஓர் இயலாக அமைத்துள்ளேன். முந்திய உரைகளிற் காணும் அதிகாரங்கள் சிலவற்றின் தலைப் பெயர்களிலும், குறள்கள் சிலவற்றின் மூல பாடங்களிலும் சிற்சில எழுத்துக்களும் சொற்களும் ஏடு பெயர்த் தெழுதியோர்களால் நேர்ந்த பிழைகள் என யான் கருதுகின்றமையால், அவற்றைத் திருத்தியுள்ளேன். முந்திய உரையேடுகளிற் காணப்படும் பாடங்களையும், அவற்றை யான் திருத்தியதற் குரிய காரணங்களையும் அவ்வவ் இடங்களில் குறித்துள்ளேன். மற்றைப்படி, பரிமேலழகர் உரைப் புத்தகப்படியே அதிகார வரிசையையும், குறள் வரிசையையும் அமைத்துள்ளேன்.

''ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை, ஆராய்ந்து கொள்க வறிவுடையார்-சீராய்ந்து, குற்றங்களைந்து குறை பெய்து வாசித்தல், கற்றறிந்த மாந்தர் கடன்'' என்பதும், ''அருந்ததிக் கற்பினாள் தோளும்

திருந்திய, தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும்-**நூலின், அரிலகற்றுங் கேள்வியார் நட்புமிம்** மூன்றும், திரிகடுகம் போலு மருந்து'' என்பதும், முந்திய உரையாசிரியர்கள் சில குறள்களில் வேறு வேறுபாடங்கள் கொண்டிருப்பதும் திருக்குறளின் மூல பாடங்களில் புகுந்திருந்த எழுத்துப் பிழைகளையும் சொற் பிழைகளையும் திருத்தும் படியானதுணிவை எனக்குத் தந்தன.

எனது உரையில் **பொருள்** என்னும் சொல்லோடு தொடங்கிப் பதவுரை எழுதியுள்ளேன்; அவ்வுரையில் வருவிக்கப்பட்ட சொற்களை ( ) இவ் வடையாளங்களுள் அமைத்துள்ளேன்; **அகலம்** என்னும் சொல்லோடு தொடங்கி இலக்கணக் குறிப்பு, வினா விடை, மேற்கோள், பாடபேதம் முதலியவற்றைக் குறித்துள்ளேன்; **கருத்து** என்னும் சொல்லோடு தொடங்கிக் கருத்தினைக் கூறியுள்ளேன். என் உரையைப் படிக்கத் தொடங்குபவர்களில் முன் இலக்கிய இலக்கண ஆராய்ச்சி யில்லாதார், முதன் முறை படிக்கும் போது **பொருளையும் கருத்தையும்** மாத்திரம் படிக்குமாறும், நூல் முழுவதையும் ஒரு முறை படித்து முடித்து நூலை இரண்டாம் முறை படிக்கும்போது **அகலத்தையும்** சேர்த்துப் படிக்குமாறும் வேண்டுகிறேன்.

அவையடக்கம் கூறுதல் பேரறிவுடையார் வழக்காலின், அஃதில்லாத யான் அதனைக் கூறாது விடுகிறேன். தமிழ் மக்களெல்லாம் திருவள்ளுவர் திருக்குறளைக் கற்றும் கேட்டும் உணர்ந்து, அது கூறும் நெறியில் ஒழுகி மேம்பட வேண்டு மென்று யான் கோருகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் துணை.

தூத்துக்குடி — **வ.உ.சிதம்பரம் பிள்ளை**

9-1-1935 — உரையாசிரியன்

திருக்குறளைப் பற்றி பேசாத நாளெல்லாம் வீணாளே எனச் சாற்றி செயற்படுத்தியும் வாழ்ந்தவர் வ.உ.சி. எனவே தான் தனது வாழ்நாளில் மிகுந்த கஷ்டங்களுக்கு இடையிலும் திருக்குறளுக்கு உரை எழுதி வெளியிட்டார்.

''வ.உ.சி.யின் உரை அவர் மேற்கொண்ட புதிய பாடங்களாலேயே கருத்து வேறுபாடு உடையதாய் அமைகின்றது'' என்பர் வித்துவான் மு.வை.அரவிந்தன்.★

என்றாலும் வ.உ.சி.யின் உரையின் சிறப்புக்களை எவரும் மறைத்திட இயலாது.

★ உரையாசிரியர்கள், 1968, பக் 369.

இன்னிலை உரையில் திருக்குறள்

பொய்கையார் எழுதிய இன்னிலைக்கு உரை எழுதி 1917-ல் வெளியிட்டவர் வ.உ.சி. அந்த உரையில் முப்பது நூல்களை மேற்கோள்காட்டி எழுதியிருக்கிறார். அதில் குறிப்பாக திருக்குறளையே மிகுதியும் காட்டுவதால் வ.உ.சி.யின் திருக்குறள் ஈடுபாட்டினை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

வ.உ.சி.யின் திருக்குறள் உரை

அறிஞர் அ. சங்கரவள்ளிநாயகம் எழுதிய 'வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கிய பணிகளும்' எனும் நூலில் (1994) 184-வது பக்கம் முதல் 216-வது பக்கம் வரையில் வ.உ.சி.யின் திருக்குறள் உரை குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

அறத்துப்பாலில் பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் எனப் பரிமேலழகர் நான்காகப் பகுத்திருக்க வீட்டியல் என்னும் ஓர் இயலை அதிகமாக்கி ஐந்து இயல்களாக வ.உ.சி. பகுத்துள்ளார். அதிகாரவைப்பு மாற்றி அமைத்துள்ளார். (தனது உரைப்பாயிரத்தில் இது குறித்து வ.உ.சி. தெரிவித்துள்ளார்)

அதிகாரப் பெயர் மாற்றம்

புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரத் தலைப்பினை மகப்பேறு என்றும், அழுக்காறாமை என்பதனை அழுக்கறாமை என்றும் வ.உ.சி மாற்றி அமைத்துள்ளார். குறளுக்குப் பொருள் கூறும் முறையில், புதுப்பொருள், புதிய விளக்கம், புதிய நயம், இலக்கண நுட்பத்தோடு விளக்கல், தமிழ் மரபுக் கொவ்வா உரையை மறுத்தல், உரை விளங்காத இடங்களைப் பதவுரையில் வருவிக்கப்பட்ட சொற்களுடன் விளக்குதல் முதலிய பல கூறுகளை வ.உ.சி.யின் உரையில் காணலாம்.

பரிமேலழகரை மறுத்தவை

பொருத்தமின்மை, சொற்களின் வைப்பு முறையினை உணராமை, உலக வழக்கிற்கு முரண்படல், சொற்களுக்கு நேரிய பொருள் உணராமை, இலக்கணப் பொருத்தம் இன்மை, நூல் வழக்கிற்கு ஒவ்வாமை ஆகிய காரணங்களால் வ.உ.சி பரிமேலழகர் உரையினை 76 இடங்களில் வேறுபட்டுள்ளார்.

உரை வேற்றுமைகள்

பரிமேலழகர் உரையில் இதுகாறும் பலரும் வேற்றுமை உரை கண்டுள்ளனர். அதுகுறித்த விவரம் இதோ....

மணக்குடவர் 140, பரிதியார் 171, பரிப்பெருமாள் 13, காளிங்கர் 143 பழைய உரை 8 , பழைய உரை உ.வே.சா. நூலக வெளியீடு, 24, பழைய உரை சரசுவதி மகால் வெளியீடு 32, தருமர் உரை 1, மல்லர் உரை 8, வீரமாமுனிவர் வரை 10, இராமனுசக்கவிராயர் உரை 25, கவிராச பண்டிதர் 51, காரிரத்தினக் கவிராயர் 1, நாகை. சொ. தண்டபாணியார் 43, அரசஞ் சண்முகனார் 4, மு.ரா. அருணாசலக்கவிராயர் 11, கா. சுப்பிரமணிய பிள்ளை 33, திரு.வி.க. 33, பொன்னம்பலம் இராமநாதன் 5, பி.சா. சுப்பிரமணிய சாத்திரியார் 12, மு. வரதராசனார் 16, புலவர் குழந்தை 59, வ.சுப.மாணிக்கனார் 6, நாமக்கல் கவிஞர் 113, திருச்சி கோ. வரதராசனார் 29, ஞான பூபதி 2, ஈக்காடு சபாபதி முதலியார் 2, ந.சி. கந்தையா பிள்ளை 1, சுகாத்தியர் 5, கா.அப்பாத்துரையார் 50, அ.கு.ஆதித்தனார் 8, கு.ச. ஆனந்தன் 43, இறையரசன் 17, சி. இலக்குவனார் 8, வை.மு.கோபால கிருட்டினமாச்சாரியார் 22, மு. கோவிந்தசாமி 68, சாமி. சிதம்பரனார் 5, தேவநேயப்பாவாணர் 34, தண்டபாணி தேசிகர் 12, திருக்குறள் முனிசாமி 3, பரமசிவம்பிள்ளை 1, மயிலை சிவமுத்து 7, ஞா. மாணிக்கவாசகன் 3, புலியூர் கேசிகன் 3, கோ.வடிவேலு செட்டியார் பதிப்பு-1, கி.வீரராகவன் 10, புலவர் செந்துறை முத்து 1, (எண்கள் உரைவேற்றுமைகளின் எண்ணிக்கை ஆகும்). திருக்குறள் அறத்துப்பால் உரைவேற்றுமை நூலில் (1989) முனைவர் இரா.சாரங்கபாணி இதனைத் தெரிவித்துள்ளார் .

திருச்செந்தூர் முருகன் கோயிலில்

திருக்குறளின்பால் மிக ஈடுபாடு கொண்டிருந்த வ.உ.சி. திருக்குறளுக்கு எழுந்த உரையாசிரியர்களின் உரை கடினமாக இருந்ததை உணர்ந்து, அனைவரும் படிப்பதற்கேற்ற நிலையில் எளிமையான உரையினை எழுதி 1934-இல் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் அரங்கேற்றினார்.

1935-இல்

தூத்துக்குடி வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் அச்சிடப்பட்ட வ.உ.சியின் அறப்பால் விருத்தியுரை 300 பக்கங்களைக் கொண்டது. நூல் அச்சிட்டு முடிந்தவுடன் இ.மு. சுப்பிரமணிய பிள்ளையின் பார்வைக்கு அதனை அனுப்பி வைத்தார். அவர் நூலில் பிழை திருத்தம் என இரண்டு பக்கங்கள்

அளவில் குறித்து அனுப்பி அதுவும் அச்சாகியுள்ளது. ஆக 302 பக்கங்களைக் கொண்ட அந்த விருத்தியுரை ஒரு ரூபாய் விலையில் அப்போது வெளியிடப்பட்டது.

தமிழ்த்தொண்டு

28-3-1935-இல் த.வேதியப் பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில் 'திருவள்ளுவர் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில் அறத்துப்பால் புத்தகம் என்று இதனுடன் Book Post-ல் வருகின்றது. இதனையும் வாங்கிப் படிப்பார் தமிழ்நாட்டில் இரார் என்று தான் தோன்றுகிறது'..... இக்கடிதம் 1960 அமுத சுரபியில் வெளிவந்துள்ளது என்பர் ஆ.இரா.வெங்கடாசலபதி.★

பொருள் இழப்பு எதிர்பார்ப்பு

வேதியப்பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதவரிகள் வ.உ.சி. பொருள் வரவை எதிர்பார்த்து திருக்குறள் பணியினைச் செய்யவில்லை என்பது புலனாகிறது. பொருள் இழப்பை எதிர்நோக்கியே, பொருளார்ந்த தமிழ்த் தொண்டாற்றியுள்ளார் எனத் தெரிகிறது என்பர் தி.லீலாவதி தமிழகத்தில் புத்தகம் வாங்கிப் படிப்பார் அதிகமிரார் என்பதனை அப்போதே வ.உ.சி. உணர்ந்து உள்ளார் என்பதனையும் அறிய முடிகிறது.

வள்ளல் உள்ளம்

4-9-1935-இல் த.வேதியப்பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில் 'இதனுடன் திருக்குறள் 1ம், மெய்யறம் 1-ம் Certified Book-Post-ல் வருகின்றன. பாடத்திருத்தங்களிலும் தங்களுக்கு உண்டாகும் சந்தேகங்களையெல்லாம் தெரிவித்திடுக. அவற்றை நிவர்த்திக்க முயலுகிறேன். எனது நூல்களைத் தாங்கள் வேண்டும் பிரதிகள் அனுப்பச் சித்தமாயிருக்கிறேன். அவற்றைத் தாங்கள் விற்றுத் தங்கள் செலவுக்குப் பணத்தை உபயோகித்துக் கொள்ளலாம் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்' என்று குறிப்பிட்டதில் வறுமையிலும் வ.உ.சியின் வள்ளல் உள்ளம் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.★★

வ.உ.சி.யின் திருக்குறள் உரையினை முழுவதுமாக இங்கு வெளியிடவில்லை; அறத்துப்பாலில் ஒரு குறளுக்கு வ.உ.சி. எழுதிய உரை மட்டும் இதோ....

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

பொருள் : பொருள் இல்லார்க்கு இ உலகம் இல்லாகி ஆங்கு பொருள்

★ வ.உ.சி. கடிதங்கள், சென்னை, 1984, பக் 120.

★★ தமிழ் தந்த வ.உ.சி, சென்னை, 1986, பக் 102.

இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லையாயினாற் போல, அருள் இல்லார்க்கு அ உலகம் இல்லை அருள் இல்லாதார்க்கு அவ்வுலக இன்பம் இல்லை.

அகலம் : இல்லாகி யாங்கு என்பது வினையெச்சத் தொகை. 'இல்லாகிய ஆங்கு' என்பது அகரம் கெட்டு நின்றது எனினும் அமையும். 'உலகம்' இரண்டும் ஆகுபெயர், அவற்றின் இன்பங்களுக்கு ஆயினமையால். பரிமேலழகர் பாடம் 'இல்லாதி யாங்கு' அது பிழைபட்ட பாடம்.

கருத்து: அருள் இல்லார்க்கு வீட்டுலகம் இல்லை.

வ.உ.சி.யின் பொருட்பால், உரை

1935-இல் வ.உ.சி வெளியிட்ட அறப்பால் விருத்தியுரையின் பின்பக்கத்தில் திருக்குறள் எனது உரையுடன் பொருட்பால் அச்சில் ஒரு ரூபாய் என்று விளம்பரம் செய்துள்ளார். வ.உ.சியின் பொருட்பால் உரை குறித்து கணியர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அமைச்சர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, தனது நெல்லை தமிழ்ப்புலவர்கள் நூலில் (1953) தரும் தகவல் இதோ.....

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை

''1936 ஏப்பிரல் முதல் வாரத்தில் பொருட்பாலின் முதல் எட்டுப்பக்கங்கள் என் பார்வைக்கு வந்தன. அவைகளை யான் திருத்தியனுப்ப இவர் 5-4-1936-ல் எழுதிய பாராட்டுக் கடிதப்படியை இதன்பின் சேர்த்திருக்கிறேன். இப்போது வழங்கும் பாடத்தை இவர் திருத்தியிருந்த இடங்கள் பெரும்பாலானவைகளைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ஒவ்வொரு பகுதியிலும் குறித்தனுப்பினேன், இவர் அவைகளையெல்லாம் (வ.உ.சி) ஏற்றுக்கொண்டு பொருட்பாலை நல்ல முறையில் அச்சிட்டு முடிக்க முனைந்து நின்றார். இருபத்து மூன்று அதிகாரங்களும், இருபத்து நான்காவது அதிகாரத்தில் ஏழு பாடல்களும் எனது பார்வையில் அச்சேறின. அவைகளின் படியொன்று அச்சான உடனுக்குடன் வ.உ.சி. எனக்கு அனுப்பி உதவினார். அவைகளை நான் இன்றும் நன்கு பேணி வைத்திருக்கிறேன். இவரது பொருட்பாலுரை முழுவதும் அச்சாகி வருதல் வேண்டும். காமத்துப்பாலுக்கும் வ.உ.சி விரிவுரை எழுதி முடித்து வைத்திருந்தார். அவைகள் வெளிவந்தால் தமிழ் நூல்களிலே ஒப்புயர்வற்றதாகிய திருக்குறளுக்குச் சிறந்த திறவுகோல்களாகப் பெரிதும் உதவும். வீரர் சிதம்பரனார் தம் வாழ்நாளெல்லாம் அரிதின் முயன்று ஆராய்ந்து கண்ட உண்மைகள்; வீண் போகாமல் நிலை நிற்கும்'' என்ற இ.மு. சுப்பிரமணிய பிள்ளையின் வரிகளை தமிழ் மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.





V.O. CHIDAMBARAM PILLAI
PLEADER.

TUTICORIN

5-4-1926

திருக்குறள் அறப்பால் உரையின் முன்னுரையில், வ.உ.சி பொருட்பால் உரை 300 பக்கங்களில், இன்பப்பால் மூலத்திற்கும், திருக்குறள், திருவள்ளுவர் குறித்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் 300 பக்கங்களில் வெளியிட எண்ணியுள்ளதை தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

சாத்தூரில் வ.உ.சி

தனது வாழ்வின் இறுதி வரை திருக்குறள் தொண்டிலேயே வ.உ.சி. காலத்தைக் கழித்து வந்தார். 1935 மே மாதத்தில் சாத்தூரில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டத்தில் வ.உ.சி கலந்து கொண்டார்.

''சாத்தூர் ஏ.வி.ஸ்கூலில் திரு.வ.உ.சிதம்பரம்பிள்ளை தலைமையில், திருவாளர்கள் பொன்னம்பலம்பிள்ளை, டி.எஸ். கந்தசாமி முதலியார் பேசினார்கள்.★

முடிவாக

இத்தனை உரைகள் தோன்றியும் எல்லோரும் ஒப்பும் ஓர் உரை இல்லாமை திருக்குறளுக்கு பெரிய குறைபாடே ஆகும்; ஏனென்றால் திருவள்ளுவரின் கருத்து ஏதேனும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும்.

குன்றின் மேலிட்ட விளக்கெனப் பொலியும் குறளினிடத்தே குற்றம் கண்டார் ஒருவரும் இல்லை. ஒருவரொடொருவர் முரண்பட்டார் அனைவரும் கூட தத்தம் கொள்ளைக்குத் திருக்குறளையே எடுத்துக்காட்டாக எடுத்தாள்வர்' என்பர் தெ.பொ.மீ.★★எனவேதான் காலந்தோறும் திருக்குறளுக்கு புதிய உரைகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

வ.உ.சி. சுப்பிரமணியன்

வ.உ.சியின் பொருட்பால், இன்பப்பால் உரைகளின் பிரதிகள் வ.உ.சியின் புதல்வர் மறைந்த வ.உ.சி சுப்பிரமணியன் அவர்களிடம் இருந்ததா என்பதனை இப்போது அறிய அவர்களது துணைவியார் கண்ணியத்திற்குரிய பத்மாவதி சுப்பிரமணியம் அவர்களையோ, அல்லது வ.உ.சியின் நெருங்கிய உறவினர்களையோ, அல்லது வ.உ.சி ஆய்வாளர்களையோ அணுகி, வ.உ.சியின் பொருட்பால், இன்பத்துப்பால் உரைகளைத் தேடி எடுத்துப் பதிப்பிக்கும் முயற்சியினை வ.உ.சி ஆர்வலர்கள் செய்திட வேண்டும்.

★ திருவள்ளுவர் நினைவுமலர், திருவள்ளுவர் திருநாட்கழகம் பவளக்காரத்தெரு, சென்னை 1936, பக் 136.

★★ கோட்டம் முதல் குமரி வரை, சென்னை, பக் 226. (1999 டிசம்பர் 31-2000 ஜனவரி,

‘அடியேன் எப்போதும் உன் திருவடியை மறவாமல் வாழ்த்தி வருகின்றேனே அடியேன் ஆக்கிய திருக்குறள் விரிவுரை அச்சாகும் வரையாவது நோயற்ற வாழ்வு தந்தருளும்; கூடிய விரைவில் இந்தியருக்கு முழுஉரிமை தந்து ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு அகலவும், அதனால் இந்திய மக்கள் விடுதலை பெற்றுப் பல கலைகளில் முன்னேறி நல்வாழ்வடையவும் திருவருள்புரியும். அடியேனும் உயிருடனிருந்து அந்நன்னாளைக் காணுமாறு கடைக்கண் பார்த்தருளும்’ என்று திருச்செந்தூர் முருகன் பெருமாள் திருமுன்பு நின்று கண்ணீர் வர வ.உ.சி. பிரார்த்தனை செய்துள்ளார்.

‘நாட்டிற்குச் சுதந்திரம் வரவில்லையே எனது திருக்குறள் பொருட்பால் இன்பப்பால் உரைகள் அச்சாகவில்லையே என்பது வ.உ.சியின் இறுதி நாட்களில் இலட்சிய தாகமாயிருந்தது. திருவள்ளுவர் ஆண்டு 1967, கொல்லம் 1112 கார்த்திகைத் திங்கள் மூன்றாம் நாள் புதன்கிழமை 18-10-1936 வ.உ.சி இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அவரது இறுதி ஆசைகளில் ஒன்றான நாட்டுக்கு விடுதலை 1947 ஆகஸ்ட் 15-இல் வந்து விட்டது. அவர் எழுதிய திருக்குறள் பொருட்பால்-இன்பத்துப்பால் உரைகள் இதுகாறும் வெளிவரவேயில்லை.

வ.உ.சியின் பொருட்பால், இன்பத்துப்பால் உரைகளைப் பாதுகாத்துப் பேணி வைத்திருப்பவர்கள் இதற்குப் பின்பாவது அதனை வெளியிட முன் வரவேண்டும்; அல்லது அதனை வெளியிட முன்வரும் எங்களைப் போன்றவர்களிடம் தந்திடல் வேண்டும். இதுவே நாம் வ.உ.சி.க்கு செய்யும் பூரண மரியாதையாகும். அந்த முயற்சி வெற்றி பெற இச்சிறு நூல் ஒரு துளியாவது காரணமாக அமைந்தால் அதுவே இந்நூலுக்கு கிடைத்த வெற்றி யென்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!.

★★★★★

முகூர்த்த பட்டு

சேலைகளுக்கு....



RmKV

69-75, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்.

தொலைபேசி : 339 105/6/7, 333 105 பேக்ஸ் : 322 105